# உதயன்

சுடர் : 36 கதிர் : 217 | வியாழக்கிழமை | ஆனி 17 ஆம் நாள் 01 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## போராட்டத்தை கைவிட்டனர் கைதிகள்

கொழும்பு, ஜூலை 1
மஹர மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் உள்ள தூக்குத் தண்டனைக் கைதிகள் 19

# அரச கூட்டுக்குள் முற்றுகிறது போர்

கொழும்பு, ஜூலை 1
அரச கூட்டுக்குள் சிலரது தனிப்பட்ட தீர்மானங்கள் காரணமாக ஒரு சில அமைச்சர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையிலான சிரேஷ்ட அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். 19

## இன்றும் நாளையும் தாதியர் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 1
நாடு முழுவதும் உள்ள அரச மருத்துவமனைகளில் பணியாற்றும் தாதியர்கள் இன்றும் நாளையும் வேலை நிறுத்தத்தில் குதிக்க வுள்ளனர் என்று தாதியர் 19

## மாகாண தேர்தலை பிற்போடவே தேர்தல் முறைமை சீர்திருத்தம்

திருத்தத்துக்கு முன்பாகவே தேர்தலை நடத்துமாறும் மு.கா. வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 1
"மக்கள் மத்தியில் அரச எதிர்ப்பு அலை உருவாகியுள்ளதால் 'தேர்தல் முறைமை சீர்திருத்தம்' என்ற போர்வையில் தேர்தலை ஒத்திவைப்பதற்கான நகர்வுகளில் அரசு ஈடுபட்டுவருகின்றது. எனவே, தேர்தல் முறைமை மறுசீரமைப்புக்கு முன்னர் மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும்" என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர 19



## கொரோனாவால் யாழில் இருவர் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கொவிட்19 நோய்த் தொற்றுக்கு உள்ளாகி உயி 19

## தொற்று 1,864

கொழும்பு, ஜூலை 1
நாட்டில் நேற்றும் ஆயிரத்து 864 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது 14

## சாவு 47

கொழும்பு, ஜூலை 1
இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மேலும் 47 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச 14

## நெல், அரிசிக்கு விலை நிர்ணயம்

தட்டுப்பாடு நிலவாது அரசு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 1
" அடுத்த 6 மாதங்களுக்குத் தேவையான அரிசி, கையிருப்பில் உள்ளது. எனவே, நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது. அரிசியை அதிக விலைக்கு விற் 19

## யாழ். மாணவனின் புதிய செயலி

யாழ்ப்பாணம், ஜூலை 1
வாட்ஸ்அப் மற்றும், வைபர் ஆகிய செயலிகளுக்கு இணையான புதிய வகை செயலி ஒன்றை யாழ்ப்பாண மாணவர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி கற்கும் நக்கீரன் மகழினியன் (வயது15) என்ற மாண 19



## மீள்குடியேற்ற இணைப்பாளராக நியமனம் பெற்றார் கீதநாத்

கொழும்பு, ஜூலை 1
வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான அரசின் மீள்குடியேற்ற இணைப்பாளராக அறிவிக்கப்பட்டிருந்த பிரதமரின் 19

## பஸ்ஸை மோதியது டிப்பர்; இருளில் மூழ்கியது மீசாலை

யாழ்ப்பாணம், ஜூலை 1
தென்மராட்சி மீசாலையில், பொலிஸ் பஸ் மீது டிப்பர் மோதியதில், பஸ், கடையொன்றின் முன் பக்கத்தை மோதி உடைத் 14



## கொரோனா விதிமீறல் இலங்கை வீரர்கள் மூவருக்கும் தடை!

கொழும்பு, ஜூலை 1
கொரோனா விதி மீறலில் ஈடுபட்ட இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மூவருக்கும் தலா ஒரு வருடம் தடை விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது இலங்கை கிரிக்கெட் 19

## மீண்டும் பயணத்தடையா? முடிவு அடுத்த வாரம்

கொழும்பு, ஜூலை 1
இந்தியாவில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தி தற்போது பிரிட்டனில் அச்சுறுத்தலை தோற்றுவித்துள்ள 'டெல்டா' மாறுபாடு கொண்ட கொரோனாத் தொற்று இலங்கையில் மேலும் பரவக்கூடிய அபாயம் இருக்கின்றது என எச்சரிக்கப்பட்டுள்ளது. 14

## விகிதாசார தேர்தல்முறை மாறின் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட வேண்டும்!

ஜே.வி.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 1
"ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாணசபைகளுக்கான தேர்தல் பழைய முறைமையிலேயே நடத்தப்பட வேண்டும்." என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார். தேர்தல் முறைமை சீர்திருத்தம் 14



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் சிறைக்குள் சீனர்களுக்கு சுதந்திரம்

## கஜேந்திரன் எம்.பி ஆவேசம்

**கிளிநொச்சி, ஜூலை 01**

**நாட்டைப் பிரிக்க தமிழர்கள் முனைகின்றனர் என்று எம்மைப் பிடித்து சிறையில் அடைக்கும் அரசு, மிதக்கும் கொட்டகையை அமைத்து சுகபோகமாக வேலைசெய்ய சீனர்களை அனுமதித்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி- பூநகரி கௌதாரி முனையில் சீன நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணையை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனைப் பகுதியில் சீனர் ஒருவரால் அமைக்கப்பட்ட அட்டைப்பண்ணையை பார்ப்பதற்காகச் சென்றோம். குறித்த பகுதி கௌதாரிமுனை கல்முனைப் பகுதி மக்கள் காலாதிகாலமாக தொழில்செய்து வருகின்ற இடமாகும். அவ்வாறு கடற்றொழிலில் ஈடுபடுகின்ற மக்களின் சம்மதம் ஏதும் பெறப்படாமல் கடலட்டை வளர்ப்பதற்கான பண்ணை, மற்றும் அவர்கள் தங்குவதற்கான மிதக்கும் கொட்டகை என்பவை அமைக்கப்பட்டுள்ளன. சகல வசதிகளும் அங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவ்வாறான இடத்திலேயே அந்த சீனர் கடலட்டை வளர்ப்பை மேற்கொண்டுள்ளார்.

எந்தவிதமான முறையான அனுமதிகளும் பெறப்படாமல் குறிப்பாக இந்த பிரதேச மீனவர்களின் சம்மதம் இல்லாமல் இந்த இடம் அவர்களுக்கு கடலட்டை வளர்ப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. தேசிய நீரியல் அபிவிருத்தி திணைக்களத்தின் அரியாலையில் இருக்கின்ற ஓர் அலுவலகத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது என்று தகவல் உள்ளது. ஆனால் எந்தவிதமான ஆவணமும் அவர்களால் எமக்கு காட்டப்படவில்லை.

ஒரு வெளிநாட்டவர் எவ்வாறு இலகுவாக வந்து இந்த இடத்தைப் பிடித்து கடலட்டை வளர்க்கின்ற செயற்பாடு இடம்பெறுகின்றது என்பது கேள்வியாகின்றது. இதனை சட்டவிரோதமான நடவடிக்கையாகவே நாங்கள் பார்க்கின்றோம். இது உடனடியாக நிறுத்தப்பட்டு, விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். திஸ்ஸமஹாராமவிலே சீன இராணுவத்தினரின் உடைக்கு ஒப்பான உடையுடன் நின்று வேலைகளில் ஈடுபடுகின்றமை தொடர்பில் முறைப்பாடுகள் எழுந்ததை அடுத்து அது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றது. அது தொடர்பாக விசாரிக்கிறோம் எனச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் இங்கே அது தொடர்பாக ஆட்சேபனைகள் எழுந்திருக்கின்றபோதிலும்கூட அந்தச் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சீனர்கள் என்றதும் அரசு நடவடிக்கை எடுக்க அஞ்சுகின்றதா என்ற கேள்வியும் இருக்கின்றது. தமிழர்கள் சில காரியங்களைச் செய்கின்றபொழுது சம்மந்தம் இல்லாமல் அவர்கள் நாட்டைப் பிரிக்க முனைகின்றனர் என்று எத்தனையோ பேரைப் பிடித்து சிறையில் அடைத்துள்ளார்கள்.

ஆனால் எங்கிருந்தோ வந்த சீனர் மிதக்கும் கொட்டகை அமைத்து அங்கே சுகபோகமாக எங்களுடைய மக்களைத் தெருவில் விட்டு விட்டு வேலை செய்துகொண்டிருக்கின்றார் - என்றார். (ப)

## சீனாவைக் கௌரவிக்க நாணயக்குற்றி வெளியீடு

கொழும்பு, ஜூலை 1

சீன கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டு நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு, அதனைக் கௌரவிக்கும் வகையில் இலங்கை அரசு புதிய நாணயக் குற்றிகளை வெளியிடவுள்ளது என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாடொன்றின் கட்சியைக் கௌரவப்படுத்தும் வகையில் இலங்கையில் நாணயக்குற்றிகள் வெளியிடப்படவுள்ளமை இதுவே முதல் முறையாகும்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துச் செல்கின்றது என்று பலதரப்பினரும் விமர்சனங்களை முன்வைத்து வரும் நிலையில், அந்த நாட்டின் கட்சிக்காக இலங்கை அரசு நாணயக்குற்றிகளை வெளியிட முன்வந்துள்ளமை மேலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (4)

### துணுக்காய் பிரதேசத்தில்

## நிரந்தர குடிதண்ணீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

முல்லைத்தீவு, ஜூலை 1

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களில் நிரந்தர குடிதண்ணீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

ஆண்டுதோறும் ஜுன், ஜுலை, ஓகஸ்ட் மற்றும் செப்ரம்பர் மாதங்களில் குடிதண்ணீர் நெருக்கடி காணப்படும் நிலையில் துணுக்காய் பிரதேச சபை மற்றும் துணுக்காய் பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து மாவட்டச் செயலகத்தின் நிதி உதவியுடன் குடிதண்ணீர் வழங்கலில் ஈடுபடும். துணுக்காய் பிரதேச சபையில் குடிதண்ணீர் வழங்கலுக்குரிய வாகன வசதிகள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. இதன் காரணமாக குடிதண்ணீருக்காக நெருக்கடியை எதிர்கொண்டுள்ள கிராமங்கள் குடிதண்ணீருக்காக தவிக்கின்ற நிலைமை காணப்படுகின்றது. எனவே, அமதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள்குளம், புத்துவெட்டு வான், ஐயன்கன்குளம், தேராங்கண்டல், தென்னியங்குளம், உயிலங்குளம் மற்றும் ஆலங்குளம் ஆகிய கிராமங்களில் நிரந்தர குடிதண்ணீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றனர். (ஐ-13)

## இராணுவச்சீருடை விவகாரம்: சீனாவிடம் விளக்கம் கோரல்

கொழும்பு, ஜூலை 1

திஸ்ஸமஹாராம வாவியில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சீனப் பணியாளர்கள், இராணுவச் சீருடை அணிந்திருந்தமை தொடர்பில் சீனத் தூதரகத்திடம் விளக்கம் கோரப்பட்டது என்று பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த பணியாளர்கள், சீன நாட்டின் மக்கள் விடுதலை இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. அந்தச் சீருடை, சீனாவின் ஒரு நிறுவனத்துக்கு உரியது என்று தூதரகம் பதிலளித்துள்ளது.

எனினும் எதிர்காலத்தில் அவ்வாறான இராணுவச் சீருடையை அணிய வேண்டாம் என்று சீனத்தூதரகத்துக்கு அறிவுறுத்தியுள்ளோம் - என்றார். (4)



## காணிப் பிணக்குகளால் வாழ்வில் நிம்மதியில்லை

### காணிப் பிணக்காளர்கள் கவலை

முல்லைத்தீவு, ஜூலை 1

நீண்ட காலமாக தமது காணிப் பிணக்குகள் தீர்க்கப்படவில்லை எனவும், நடமாடும் சேவைகளில் தீர்க்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தவும் இல்லை என்றும் முறிகண்டி பிரதேச காணிப் பிணக்காளர்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் தீர்க்கப்படாத காணிப் பிணக்குகள் தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

'இந்தியாவிலிருந்து வந்து ஆண்டுகள் பல ஆகியும் நிரந்தர இடமும் வீடுமின்றி உறவினர் வீடுகளில் தங்கி வாழ்கின்றோம். எமது காணிப் பிணக்குகளை தீர்த்து நிம்மதியான வாழ்வுக்கு வழியமைத்துத் தரவேண்டும்' என ஊடக சந்திப்பில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 30க்கும் மேற்பட்ட காணிப் பிணக்குகள் தீர்க்கப்படாமல் தேங்கிக் கிடக்கும் நிலையில், வீட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட அரச சலுகைகள் இல்லாது பல குடும்பங்கள் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-19)

## கண்டெடுக்கப்பட்ட பணப்பை உரியவரிடம் கையளிப்பு

சாவகச்சேரி,ஜூலை 1

வர்த்தக நிலையத்தின் முன்னால் கண்டெடுக்கப்பட்ட பணப்பை வணிகர் மன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், உரியவரிடம் பாதுகாப்பாக கையளிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வர்த்தக நிலையத்துக்கு முன்பாக காணப்பட்ட பணப் பையை வர்த்தகர் எடுத்துச்சென்று வணிகர் மன்றத்தில் ஒப்படைத்துள்ளார். சிறிது நேரத்தில் பணப் பையை காணாது தேடி அலைந்தவரை வர்த்தகர் ஒருவர் வணிகர் மன்றத்துக்கு அழைத்து வந்துள்ளார்.

இது தொடர்பாக மன்றத் தலைவர் ந.சிவபாலன் உதவிச் செயலாளர் இ.சுரேஷ் ஆகியோர் உறுதிப்படுத்திய பின்னர் பணப்பையை உரிய வரிடம் ஒப்படைத்தனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கையும் கைப்பற்றத்தான் அரசியல் கைதிகள் விடுதலை

## ஐக்கிய சோசலிசக் கட்சி குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூலை 1**
**வடக்கிலும் அரசியல் ரீதியில் பலமாக காலூன்ற வேண்டும் என்ற உள்நோக்கத்தின் அடிப்படையிலேயே சில தமிழ் அரசியல் கைதிகளை ராஜபக்ச அரசு விடுதலை செய்துள்ளது. பஸில், நாமல் ஆகியோரின் கூட்டு நாடகமே இது. எனவே, தமிழ் மக்கள் விழிப்பாகவே இருக்க வேண்டும்.**



இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலைசெய்வதற்கான அமைப்பின் முக்கிய உறுப்பினரும், ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவருமான சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
வழக்கு விசாரணை எதுவுமின்றி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் எவ்வித நிபந்தனையுமின்றி உடன் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும். இதனை ராஜபக்ச அரசு செய்யவில்லை. மாறாக வடக்கு மாகாணத்தையும் அரசியல் ரீதியில் கைப்பற்றும் நோக்கில் கூட்டு நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது.
தமிழ் மக்களின் கண்களில் இவ்வாறான செயல்மூலம் மண்ணைத் தூவி ஏமாற்றலாமா என்ற ஒத்திகையையே இதன்மூலம் நாமலும், பஸிலும் பார்த்துள்ளனர்.
இவ்வாறு நாடகமாடாமல் தமிழ் மக்கள் மீது உண்மையிலும் அக்கறை இருந்தால், சிறைகளில் 10 வருடங்களுக்கு மேலாக வாடும் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் இந்த அரசு விடுதலை செய்ய வேண்டும்.
குறித்த நபர்களை தற்போதைய அரசு தான் நெடுநாள்கள் சிறைகளில் தடுத்து வைத்தது என்பதையும் மறந்துவிட முடியாது- என்றார். (ம-4,44)

# தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை; அரசின் நடவடிக்கை திருப்தியில்லை

## அரசின் பங்காளிக் கட்சியான இலங்கை மக்கள் தேசியக் கட்சி கவலை



கொழும்பு, ஜூலை 1
அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் அரசின் நடவடிக்கையில் திருப்தியில்லை என்று இலங்கை மக்கள் தேசியக் கட்சியின் தலைவர் நாகராசா விஸ்ணுகாந்தன் தெரிவித்தார்.
பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளான இலங்கை மக்கள் தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் ஏற்பாட்டில் கல்முனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்
கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுஜன கூட்டணியில் 40 கட்சிகள் இணைந்து ஒப்பந்தம் செய்திருந்தோம்.
அப்போது எங்களுடன் சிறந்த புரிந்துணர்வுடன் நடந்து கொண்டவரே பொதுஜன பெரமுனாவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச. அந்தக் காலப்பகுதியில் எங்களுடனான பேச்சுக்களின் போது அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தினோம். அது இப்போது சாத்தியமாகியுள்ளது.
பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச சிறந்த நிர்வாகி அவர் விரைவில் நாடாளுமன்ற உறுப்பினராக மாறி அதனூடாக அமைச்சுப் பதவியையும் பெற்று நாட்டின் சகல பாகங்களுக்கும் சிறந்த முறையில் சேவையாற்ற வேண்டும். அதுவே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும்.
அரசு அரசியல்கைதிகளை விடுதலைசெய்த விடயத்தில் மகிழ்ச்சியாக இருந்தாலும் எங்களுக்கு பூரண திருப்தியில்லை.
சுதாகரன் போல பல்வேறு கதைகளை உடைய பல அரசியல் கைதிகளும் சிறையில் வாடுகிறார்கள் அவர்களும் விடுவிக்கப்பட வேண்டும் - என்றார். (ப)

# கைதிகளுக்கு பொதுமன்னிப்பு: ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு?

## கொழும்பு பேராசிரியர் தகவல்

கொழும்பு, ஜூலை 1
சிறைக்கைதிகளுக்கு ஜனாதிபதி வழங்குகின்ற பொதுமன்னிப்பை சவாலுக்கு உட்படுத்தி, நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை தாக்கல்செய்ய முடியும் என்று கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியரும், சட்டத்தரணியுமான பிரத்திபா மஹனாம தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
எந்தவொரு சிறைக்கைதிக்கும் அரசமைப்பில் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி பொதுமன்னிப்பை வழங்க முடியும்.
எனினும் பொதுமன்னிப்பின் கீழ் கைதிகள் விடுதலை செய்யப்படும் சந்தர்ப்பத்தில், அதனைச் சவாலுக்குட்படுத்தி உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்வதற்கான உரிமை மக்களுக்கு உள்ளது- என்றார்.
தூக்குத் தண்டனைக் கைதி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு, தற்போது பல்வேறு தரப்பினராலும் விமர்சிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)





# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குக

## கிழக்கு முன்னாள் பிரதித் தவிசாளர் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 1
பேரினவாத சிந்தனையில் செயற்படும் அரசு உள்ள இந்த நாட்டுக்கு எவ்விதத்திலும் பொருந்தாத பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக இல்லாமலாக்கப்பட்டு, அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலைசெய்யப்பட வேண்டும் என கிழக்கு மாகாணசபையின் முன்னாள் பிரதித் தவிசாளரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரதித் த்லைவருமான பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:
அண்மையில் ஜனாதிபதியின் பொது மன்னிப்பு என்னும் அடிப்படையில் 16 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்ட விடயம் உண்மையில் வரவேற்கத்தக்கது. எனினும் ஏனைய அரசியல் கைதிகளையும் விரைவில் விடுவிப்பதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட அரசு முன்வர வேண்டும். அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் சாதாரண கைதிகளின் விடுதலையுடன் சேர்ந்து கொலைக் குற்றவாளியாகக் கருதப்படும் துமிந்த சில்வாவை விடுதலை செய்யப்பட்டிருப்பதானது துமிந்தவின் விடுதலையை நோக்காகக் கொண்டே ஏனைய கைதிகளின் விடுதலைகள் மேற்கொள்ளப்பட்டனவா என எண்ணத் தோன்றுகின்றது.
துமிந்தவின் விடுதலை தொடர்பில் தமிழர் தரப்பில் இருந்து கேள்விகள் வந்து விடக்கூடாது என்பதற்காக எமது அரசியல் கைதிகளின் விடுதலை இடம்பெற்றதா? என்கின்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுகின்றது.
என்ன நடக்கின்றது இந்த நாட்டில், ஒரே நாடு ஒரே சட்டம் என்று வார்த்தையில் மாத்திரம் சொல்லிக்கொண்டு பேரினவாதத்துக்கு ஒரு சட்டமும் ஏனைய சமூகத்துக்கு ஒரு சட்டமும் என்ற விதத்தில் சட்டப் பிரயோகங்கள் இடம்பெறுகின்றன. அரசியல் காரணங்களுக்காக கைதுசெய்யப்பட்டு போர் முடிவடைந்து 10 ஆண்டுகள் கடந்த பின்னரும் காரணங்கள் இன்றி தடுத்து வைத்து இருப்பது எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சகலரும் விடுதலை செய்யப்பட வேண்டும் - என்றார். (ப-150)

# துமிந்த விடுவிப்பு சரியானதுதான்!

## அரசு தகவல்

கொழும்பு,ஜூலை 1
அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமையவே, துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது என்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.
இது ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு அமைய இடம்பெற்றது. அரசமைப்பில் காணப்படும் ஏற்பாடுகளுக்கு அமையவே ஜனாதிபதி அவருக்கு மன்னிப்பு வழங்கியுள்ளார்.
அமெரிக்காவின் முன்னைய அரசும் பலருக்கு மன்னிப்பு வழங்கியுள்ளது. இவ்வாறு இலங்கையில் வழங்கப்பட்ட மன்னிப்பை கேள்விக்குட்படுத்துவது அவர்களின் இரட்டை நிலைப்பாட்டை வெளிக்காட்டுகின்றது. என்று அவர் மேலும் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக தமிழ் பாடசாலைகளில்

# ஆசிரிய உதவியாளர்களை சேவைக்குள் உள்ளீர்க்குக

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை

**மலையகம், ஜூலை 1**

**மலையக பெருந்தோட்டத் தமிழ் பாடசாலைகளில் நியமனம் பெற்ற ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பே கடுவவுக்கு அவசர கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதித் தலைவர் சுந்தர லிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார். ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு நியமனம் பெற்ற தமிழ் மொழி மூலமான ஆசிரிய உதவியாளர்கள் ஆறு வருடங்கள் கடந்தும் ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்படவில்லை.

2015ஆம் ஆண்டு பெருந்தோட்ட பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 3 ஆயிரத்து 21 பேர் ஆசிரிய உதவி யாளர்களாக நியமிக்கப்பட்டனர். இந்த நியமனங்கள் பல கட்டங்களாக வழங்கப்பட்டதுடன், இவர்களுக்கான கொடுப்பனவு முதலில் 6 ஆயிரம் ரூபாவாகவும் பின்னர் 10 ஆயிரம் ரூபாவாகவும் உயர்த் தப்பட்டது. வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்வதென்றால் ஆசிரியர் பயிற்சி அல்லது நியமன பாடத்தில் பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

2005ஆம் ஆண்டு இவர்களுக்கு நியமனம் வழங்கிய நல்லாட்சி அரசாங்கம், ஒரே தடவையில் நியமனம் வழங்காமலும் அவர்களுக்கான பயிற்சி அல்லது பட்டம் பெறுவதற்கு வாய்ப்பை செய்து தராமலும் விட்டது இவர்களுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அநீதியாகும். இவ் ஆசிரிய உதவியாளர்கள் தமது உரிமையை வென்றெடுக்க ஆசிரியர் தொழிற் சங்கங்களுடன் ஒன்றிணைந்து பல போராட்டங்களை முன்னெடுத்த போதிலும் அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கமும், மலையக அரசியல்வாதிகளும் இவ் விடயம் தொடர்பாக எவ்வித கவனமும் செலுத்தவில்லை.

இதேவேளை நியமனம் பெற்ற அதிகளவான ஆசிரியர்கள் பயிற்சியை நிறைவுசெய்து ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டனர். எனினும் 2018/2019 கல்வி ஆண்டுக்கான ஆசிரியர் பயிற்சியை 2020/09/18 திகதி நிறைவு செய்த ஆசிரிய உதவியாளர்களுக்கு கடந்த 5ஆம் மாதம் 10ஆம் திகதி இறுதி ஆண்டு பரீட்சை நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்தபோதும் பின் காலவரையறையின்றி பிற்போடப்பட்டது.

எனவே இவர்களுக்குரிய இறுதி பரீட்சையை அவர்களின் சொந்த மாவட்டங்களில் நடத்துதல் அல்லது இவர்களின் துயர நிலையை கருத்தில் கொண்டு ஆசிரியர் சேவை தரம் 31 க்கு உள்ளீர்ப்பு செய்யப்படல் வேண்டும் என மிகப் பொறுப்புடன் கேட்டுக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (ஐ-159)

# வடக்கில் 240 பாடசாலைகளில் இணைய வசதிகள் இல்லை

*கல்வி அமைச்சின் செயலர் கவலை*

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடக்கு மாகாணத்தில் உள்ள 240 பாடசாலைகளில் இணைய வசதிகள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'சூம்' வகுப்பறை தொடர்பான கல்வி உயர் அதிகாரிகளுக்கும், யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா சூழ்நிலையால் தடைப்பட்ட கல்வி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் பொருட்டு தொலைக் கல்வித் திட்டத்தை செயற்படுத்த அரசு ஆரம்பித்துள்ளது. வடமாகாணத்தில் தரம் 5 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஏற்கனவே 'சூம்' தொழில்நுட்பத்தின் மூலம் செயற்படுத்தி வருகின்ற நிலையில், 82 விதமான மாணவர்கள் பங்குபற்றி பயனடைந்து வருகின்றனர். இதற்கு பெற்றோருடைய பங்களிப்பு மிகவும் உறுதுணையாக இருப்பதுடன் ஆசிரியர்களும் அதனைச் சிறந்த முறையில் தயார்செய்து செயற்படுத்தி வருகின்றனர். ஆகவே இக்கட்டான சூழ்நிலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கையைப் பாதிக்காத வகையில் செயற்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ப-20)

# இளைஞனை வழிமறித்து கூரிய ஆயுதத்தால் தாக்கு

*புத்தூர்ச் சந்தியில் சம்பவம்*

சாவகச்சேரி, ஜூலை 1

மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் வீதியில் நடந்து சென்ற இளைஞனை வழிமறித்து கூரான ஆயுதத்தால் தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுப் பகல் 11.30 மணியளவில் மீசாலை புத்தூர்ச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

மந்துவில் கிழக்கைச் சேர்ந்த 23 வயது இளைஞர் பஸ்ஸில் இருந்து இறங்கி நடந்துசென்ற வேளையில் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் அவரை மோசமாகத் தாக்கியதுடன் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர். தலை, கை, மற்றும் கால் ஆகிய பகுதிகளில் காயமடைந்த இளைஞன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ப-9)

# தவறவிட்டோருக்கு நாளை தடுப்பூசி

சாவகச்சேரி ஜூலை 1

கைதடி மருத்துவமனையில் கடந்த இரு தினங்கள் கொவிட் 19 தொடர்பான இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றப்பட்ட வேளையில் தவறவிட்ட நாவற்குழி மேற்கு மற்றும் கைதடி தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் நாளை வெள்ளிக்கிழமை அந்தந்த இடங்களில் தடுப்பூசி ஏற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாவற்குழி மேற்கு பிரிவு மக்களுக்கு நாவற்குழி ஐயனார் கோவிலடியில் உள்ள பொது நோக்கு மண்டபத்திலும், கைதடி தெற்குப் பிரிவு மக்களுக்கு கைதடி அம்பிகா சனசமூக நிலைய மண்டபத்திலும் தடுப்பூசி ஏற்றல் இடம்பெறுமெனவும், இரண்டாம் திகதியுடன் இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றுவது முடிவடைதால் ஏற்கனவே முதலாம் கட்டத் தடுப்பூசி ஏற்றி இதுவரை இரண்டாம் கட்டத் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளாத மக்களை தவறாமல் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுமாறும் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ப-9)





தென்மராட்சி பிரதேசத்தில்

# தொலைக்கல்வி நடவடிக்கைக்கு மேலும் 15 மத்திய நிலையங்கள்

சாவகச்சேரி, ஜூலை 1

தென்மராட்சி கல்வி வலயத்தால் தொலைக்கல்வி கல்வி நடவடிக்கைகளுக்காக இணைய வசதிகள் இல்லாத மாணவர்களுக்கு பிரதேசத்தில் மேலும் 15 மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அலைபேசி மற்றும் தொலைக்காட்சி வசதி இல்லாத மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்த இணைய வசதி இல்லாத கிராமப் புறப் பாடசாலைகளில் இணைய வசதிகளுடன் கற்றல் நடவடிக்கைகளை வழங்கும் செயற்பாடாக இந்த மத்திய நிலை யங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே கச்சாய் மகா வித்தியாலயம் மற்றும் சந்திரமௌலீச வித்தியாலயம் ஆகியவற்றில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மகிந்தோதய ஆய்வுகூடம் உள்ள சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, வரணி மத்திய கல்லூரி மற்றும் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆகியவற்றில் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் கிராமப் புறப் பாடசாலைகளான எழுதுமட்டுவாழ் சிறிகணேசா வித்தியாலயம், விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம், கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை, நாவற்குழி மகா வித்தியாலயம், கைதடி குருசாமி வித்தியாலயம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், மந்துவில் சிறிபாரதி வித்தியாலயம், மிருசுவில் அ.த.க.பாடசாலை மற்றும் வரணி இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம் ஆகிய பத்து பாடசாலைகளிலும் மத்திய நிலையங்களாகச் செயற்பட வலயக் கல்வி அலுவலகத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த 15 பாடசாலைகளிலும் சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் எதிர்வரும் ஐந்தாம் திகதி தொடக்கம் இணைய வசதிகளுடன் கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு உற்பத்தி இடம் வவுனியாவில் முற்றுகை



சாவகச்சேரி, ஜூலை 1
வவுனியா பால மோட்டை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட நெடுன்குளம் வயல் பகுதியில் இயங்கிய கசிப்பு உற்பத்தி இடம் சிறப்பு அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம் முற்றுகையிடப் பட்டது.
சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து ஒரு பெரல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பவை கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் பால மோட்டீட பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ-110)

# காணி இல்லாத மக்களுக்கு அரச காணிகளை வழங்குக

## மாந்தை கிழக்கு தவிசாளர் வலியுறுத்து

முல்லைத்தீவு, ஜூலை 1
**மாந்தை கிழக்கு பிரதேசத்தில், காணி இல்லாத மக்களுக்கு அரச காணிகளைப் பகிர்தளிப்பதில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதன் பின்னர்தான் அரச காணிகளை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் ம.தயானந்தன் வலியுறுத்தினார்.**



முல்லைத்தீவின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் காணிப் பயன்பாட்டுக்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
மாந்தை கிழக்கு பிரதேச செயலர் என்.ரஞ்சனா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதேச சபைத் தவிசாளர் ம.தயானந்தன், காணிப் பகுதி உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.
மாந்தை கிழக்கு பிரதேச செயலக நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட பகுதிகளில் குத்தகைக்கு வழங்கப்பட்ட அரச காணிகள், மற்றும் உரிமைகோரப்படாத காணிகள் ஆகியவை தொடர்பாக கூட்டத்தில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன.
இதன்போது கருத்துத் தெரிவித்த மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் ம.தயானந்தன்;
"மாந்தை கிழக்கில் பல குடும்பங்கள் காணிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றன. காணி இல்லாத மக்களுக்கு அரச காணிகளைப் பகிர்ந்தளிப்பதில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதன் பின்னர் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஏனையவர்களுக்கும் காணிகளை வழங்க வேண்டும்" - என்றார்.
இதனை அடுத்து கூட்டத்தில் அரச காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. நீண்ட விவாதத்தின் பின்னர் மாந்தை கிழக்கில் அரச காணி குத்தகைக்கு வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டது. (ப-19)

# உரத் தட்டுப்பாடு: யாழில் கலந்தாய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ்.மாவட்ட விவசாயிகள் எதிர்கொள்ளும் உரத் தட்டுப்பாட்டுப் பிரச்சினைகளுக்கான உடனடித் தீர்வுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், சேதனப்பசளை உற்பத்தி மற்றும் உரங்களைப் பெற்றுக்கொள்ளல் ஆகியவை தொடர்பாக ஆராயப்பட்டது. (ப-20)



# சௌக்கிய வாரத்துக்கான நிகழ்வுகள் ஒத்திவைப்பு

சாவகச்சேரி, ஜூலை 1
தென்மராட்சி பிரதேசத்தில் சௌக்கிய வாரம் நிகழ்ச்சித் திட்டத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த இரு நிகழ்வுகள் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.
நீர்இறைக்கும் இயந்திரங்கள் கையளிப்பு மற்றும் சமுர்த்தி திட்ட வீடு கையளிப்பு ஆகிய நிகழ்வுகளே ஒத்திவைக்கப்பட்டுள்ளன. அத்துடன் திட்டமிட்டவாறு ஏனைய நிகழ்வான வரணி சமுர்த்தி வங்கியால் பயனாளர்களுக்கு கடன் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

### தென்மராட்சியில்
# சௌக்கிய திட்டத்தில் இரு கிராமங்கள் தெரிவு

சாவகச்சேரி, ஜூலை 1
தென்மராட்சி பிரதேசத்தில் சௌக்கிய திட்டத்தில் இரு கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு அங்குள்ள தொழில் செயற்பாடுகளை வலுப்படுத்த 19 மில்லியன் ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.
இதற்கான நிதி சமுர்த்தி வதிவிடப் பொருளாதார நுண்நிதிய சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சால் ஒதுக்கப்பட்டுள்ளது.
பாரம்பரிய தொழில் ஒன்றில் ஈடுபடுபவர்கள், சுய தொழிலில் ஈடுபடும் குறைந்த வருமானப் பயனாளிகள் மற்றும் திட்டவட்டமான வருமானமற்ற நிதி தொழில்நுட்பம் மற்றும் சந்தை வாய்ப்பைத் தேடிக்கொள்ள முடியாத சிறிய தொழில் முனைவோர்கள் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான சௌக்கிய உற்பத்திக் கிராமங்களை அமைப்பதற்கு அமைச்சால் திட்டமிடப்பட்டுள்ளது.
இதன் பிரகாரம் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வரணி வடக்கு மற்றும் மட்டுவில் சந்திரபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.
வரணி வடக்கில் இயங்கும் பனை தென்னை வள அபிவிருத்திக்கு, கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் செயற்பாட்டை வலுப்படுத்தும் பொருட்டும், அப்பகுதியில் பனைசார் உற்பத்தியில் ஈடுபடுவோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவுமென 9.48 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
மட்டுவில் சந்திரபுரம் கிராம அலுவலர் பிரிவில் அங்குள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் போஷாக்கு உணவு உற்பத்தி நிலையத்தை வலுப்படுத்தும் பொருட்டும், அங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டும் 9.87 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# இரட்டைவாய்க்கால் - மாத்தளன் வீதியை சீரமைக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 1
முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் இரட்டைவாய்க்கால் சந்தியில் இருந்து மாத்தளன் வரை செல்லும் பிரதான வீதியை சீரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
போர் நடைபெற்றபோது பாதுகாப்பு வலயங்களாகக் காணப்பட்ட மாத்தளன், அம்பலவன்பொக்கணை மற்றும் வலைஞர்மடம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தற்போது போக்குவரத்து செய்யமுடியாத அளவுக்கு குறித்த வீதி சேதமடைந்துள்ளது.
கடந்த பத்தாண்டுகளில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் என்பவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் குறித்த வீதியின் சீரமைப்பு தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.
சுமார் 3 கிலோ மீற்றர் நீளம் கொண்ட குறித்த வீதி சேதமடைந்துள்ளதன் காரணமாக பஸ் சேவைகள் நடைபெறுவதில்லை. பஸ் சேவைகள் நடைபெறாததன் காரணமாக புதுக்குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவு மருத்துவமனைகளுக்கு செல்வதில் அப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 500 குடும்பங்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன. அத்துடன் இப் பிரதேசத்தில் பிடிக்கப்படுகின்ற கடல் உணவுகள் முல்லைத்தீவு நகரத்துக்கு எடுத்துச்செல்லப்படுவதில் நெருக்கடிகள் காணப்படுகின்றன. எனவே இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையும் பாகிஸ்தானும் பாதுகாப்பில் கூட்டு நாடுகள்

## பாகிஸ்தானின் விசேட தூதுவர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஜூலை 1**

**இலங்கையும் பாகிஸ்தானும் பாதுகாப்பு ரீதியாக கூட்டு நாடுகளாக நீண்டகாலமாக இருந்து வருகின்றன என்று கிளிநொச்சிக்கு வந்த பாகிஸ்தானின் விசேட தூதுவர் தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களுக்கான உலர் உணவுப்பொருள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாகிஸ்தானின் இலங்கைக்கான தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தீவிரவாதம் பற்றி பேசுகின்றபோது முதலாவதாகவும் கடைசியாகவும் பாதுகாப்பு பற்றி பேசவேண்டும். இதற்கு இலங்கைதான் முதல் உதாரணமாகும். இலங்கையும் பாகிஸ்தானும் நீண்ட காலமாக நட்பு நாடுகளாகவும், பொருளாதார உதவிகளை வழங்குகின்ற நாடுகளாகவும், பாதுகாப்பு ரீதியாக ஏனைய உதவிகளை வழங்கும் நாடுகளாகவும் இருந்து வருகின்றன. நாட்டினுடைய சொந்தப் பாதுகாப்புக்கு பாதுகாப்புப் படைகள் தான் முன்நிற்கின்றன. அவர்கள் முன்நிற்பதாலேயே மக்கள், நாட்டின் வளங்கள் மற்றும் உடைமைகள் பாதுகாக்கப்படுகின்றன. நான் ஒரு பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த முஸ்லிம் நபராவேன். இலங்கையில் பௌத்தர்கள் மற்றும் ஏனைய மதத்தவர்களும் வாழ்கின்றனர். ஆனால் பாதுகாப்பு பற்றி பேசும் போது நாங்கள் மிகவும் நெருக்கமாகவும் விரிவாகவும் அதைப் பார்க்கவேண்டும். 2005ஆம் ஆண்டிலிருந்து எங்களது வளர்ச்சி காணப்படுகின்றது - என்றார். (ப-6)

# மந்திரவாதியின் சடலமே கங்கையில் மீட்கப்பட்டது



கொழும்பு, ஜூலை 1

சங்கிலியால் கைகள் கட்டப்பட்ட நிலையில் களனி கங்கையில் மீட்கப்பட்ட சடலம் 54 வயதுடைய மந்திரவாதி ஒருவருடையது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தகாத உறவு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து மந்திரவாதியுடன் முறையற்ற உறவு வைத்திருந்த பெண்ணொருவர் உட்பட மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சடலமாக மீட்கப்பட்ட மந்திரவாதியும், கைது செய்யப்பட்ட பெண்ணும் ஹங்வெல்ல பொலிஸ் பிரிவில் எம்புல்கம பகுதியில் தற்காலிகமாக வசித்து வந்துள்ளனர். கடந்த 23ஆம் திகதி இருவர் வீட்டுக்குள் புகுந்து மந்திரவாதியைக் கடத்திச்சென்றனர் என்று கைதுசெய்யப்பட்டுள்ள பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

எனினும் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் குறித்த பெண்ணுக்கும், எல்புல்கம பகுதியைச் சேர்ந்த சாரதி ஒருவருக்கும் இடையில் தகாத தொடர்பு ஏற்பட்டுள்ளமை காரணமாகவும் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் கொலைக்குப் பயன்படுத்திய சுத்தியல் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவையும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# சிறைக்குள் வீசப்பட்ட மர்மப்பொதி

கொழும்பு, ஜூலை 1

களுத்துறை சிறைச்சாலைக்குள், வெளியிலிருந்து தூக்கி வீசப்பட்ட மர்மப் பொதியொன்று மீட்கப்பட்டது.

அதிலிருந்து 4 கையடக்கத் தொலைபேசிகள், சார்ஜர் மற்றும் 25 புகையிலைகள் மீட்கப்பட்டன என்று சிறைச்சாலைகள் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

குறித்த பொருள்கள் மேலதிக விசாரணைகளுக்காக களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ம-4)



# யாழ்ப்பாணமும் வந்தார் பாகிஸ்தானின் தூதுவர்

யாழ்ப்பாணம், ஜூலை 1

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் முகமது சாத் கட்டாக் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்துக்கு வருகை தந்தார்.

மாவட்டச் செயலகத்துக்கு வந்த அவர், முதலில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் அலுவலகத்தில், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத்தலைவரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதனைச் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது யாழ். மாவட்டத்தின் தற்போதைய அபிவிருத்தி மற்றும் சமகால நிலைமைகள் தொடர்பில் பாகிஸ்தான் தூதுவருக்கு காணொலி மூலம் விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், மாவட்ட மேலதிக செயலர் ம.பிரதீபன், மேலதிக செயலர் (காணி) எஸ்.முரளிதரன் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-20)

# இரு மீனவர்கள் மாயம்

பொத்துவில், ஜூலை 1

பொத்துவில் அறுகம்பை மீன்பிடித்துறையிலிருந்து கடந்த 23ஆம் திகதி இயந்திரப்படகில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.

பொத்துவில் களப்புக்கட்டு பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான மொகமட் தாஹா மற்றும் பொத்துவில் பசரிச்சேனையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 32 வயதுடைய ஜௌபர் தாஜுதீன் ஆகிய இருவருமே ஒரு வாரமாகியும் இன்று வரை வீடு திரும்பவில்லை. அதேவேளை காணாமல் போன மீனவர்களை மீட்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-4)



# பாக்கு 20 ரூபா

கொழும்பு, ஜூலை 1

நாட்டில் பாக்கின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால், ஒரு பாக்கு 20 ரூபா வரை விற்பனைசெய்யப்படுகின்றது.

பாக்கின் அறுவடை குறைந்துள்ள காரணத்தால், விலை அதிகரித்துள்ளது என்று உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் வெற்றிலைக்கூறின் விலையும் அதிகரித்துள்ளது.

மெதும்புர, குண்டசாலை மற்றும் பன்வில ஆகிய பகுதிகளிலேயே பாக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றது. எனினும் தற்போதைய காலநிலையால் உற்பத்தி குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# நாடாளுமன்றில் குழப்பம்; குழுவின் அறிக்கை தயார்

கொழும்பு, ஜூலை 1

நாடாளுமன்ற வளாகத்திலும், சபைக்குள்ளும் கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி அன்று இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து, அதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, அடுத்த வாரம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையிலான இந்தக் குழுவில் அமைச்சர்களான சமல் ராஜபக்ச, கெஹலிய ரம்புக்வெல, இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

இதேபோன்ற சம்பவம் மீண்டும் நாடாளுமன்றத்தில் ஏற்படாதிருப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைப் பரிந்துரைப்பதற்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

அதற்கமைய முழுமையான அறிக்கையை சபாநாயகரிடம் கையளிப்பதற்கு குழு தீர்மானித்துள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பூனைக்கு விளையாட்டு

'பூனைக்கு விளையாட்டு, ஆனால் சுண்டெலிக்குச் சீவன் போகுது...' இப்படியான ஒரு பழமொழி தமிழில் வழக்கில் உள்ளது. இது தற்போது ஆட்சியில் உள்ள கோத்தாபய அரசுக்கும், இலங்கை மக்களுக்கும் கச்சிதப் பொருத்தம்.

முன்பின் முரணான தரவுகள் தகவல்களை வெளிப்படுத்துவது கோத்தாபய தரப்பினருக்கு ஒன்றும் புதிதல்ல. அரசு ஆட்சியேறிய நாள் முதல் இது அன்றாடக் காட்சிகள்தான். ஆனால், ஆகப்பெரிய அபத்தம் என்னவெனில், இந்த முரண் தகவல்களையும் முட்டுக்கொடுத்தல்களையும் வைத்தே பேராபத்துமிக்க கொரோனா விவகாரத்தையும் அரசு எதிர்கொள்கின்றது.

கொரோனா தடுப்புச் செயலணியின் உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, நாடு டெல்டா வைரஸின் பிடிக்குள் சிக்கப்போகின்றது. இலங்கையில் பரவும் பிரதான வைரஸ் திரிபாக டெல்டா இருக்கப்போகின்றது. அடுத்த 10 வாரங்களுக்குள் இவ்வாறான பேராபத்து நிலை இலங்கையைச் சூழ வாய்ப்பிருக்கின்றது என்றெல்லாம் அறிக்கைவிட்டிருந்த நிலையில், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி சொல்வதைப்போன்று அவ்வாறான நிலை ஏற்பட சாத்தியமே இல்லை என்பதாகக் அமைந்துள்ளது அமைச்சர் காமினி லொக்குகேயின் கருத்து. அதிலும் ஒருபடி மேலே சென்று, கொரோனாவின் மூன்றாம் அலை இன்று ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டது. அடுத்த இரண்டு மாதங்களில் இலங்கை மக்கள் சாதாரண வாழ்க்கையை வாழக்கூடியவாறு வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார் லொக்குகே.

இது அரசின் கருத்து. அரசின் உயர் அதிகாரத்தில் உள்ள இரு பிரதிநிதிகள்தான் இந்தக் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். ஆனால் இரு கருத்துகளுக்கும் உள்ள இடைவெளி இமாலயமானது – நேரெதிரானது. தற்போது கேள்வி என்னவென்றால், மக்கள் இராஜாங்க அமைச்சர் சொல்வதை நம்புவதா அல்லது அமைச்சர் சொல்வதைக் கேட்டுக்கொள்வதா என்பதே.

அதேநேரம், இவ்வாறான முரண் கருத்துக்கள்கூட திட்டமிட்டு முன்வைக்கப்படுகின்றவைதானோ என்ற எண்ணம் மக்கள் மத்தியில் தற்போது இல்லாமலில்லை. நாளை டெல்டா தீவிரமானால் அரசின் பதில், 'டெல்டா ஆபத்தை வெளிப்படையாக அறிவித்தோம். துறைசார் அதிகாரிகளைக் கொண்டு எச்சரித்தோம். ஆனால் மக்கள் பொறுப்பற்று நடந்தார்கள். மக்களின் பொறுப்பற்றதனத்தால்தான் இந்தப் பேரழிவு' என்பதாக அமையும். புத்தாண்டுக் கொத்தணிக்கு அரசு சொன்ன பதில் இதற்கு ஆகச் சிறந்த உதாரணமாகக் கட்டியம் கூறுகின்றது. அதேநேரம் கொரோனா கட்டுக்குள் வந்தால், 'சொன்னதைச் செய்தோம். செய்வதையே சொல்வோம்' என்ற தென்னிந்திய திரைப்பட வசனங்கள் 'கோத்தாபய அன்ட் கோ'விடம் இருந்து முழக்கமாக வெளிவரும். ஆக இதுவொரு தற்காப்புக் கலை.

அரசு தன் வித்துவத்தனத்தையும் அரசியல் சதுரங்க ஆட்டத்தையும் காட்ட வேண்டிய விவகாரம் கொரோனா அல்ல. கொரோனாத் தொற்று, இறப்பு உள்ளிட்டவற்றில் முரணான புள்ளி விவரங்களைத்தான் அரசு வெளியிடுகின்றது என்பது பொதுவான குற்றச்சாட்டாக முன்வைக்கப்படும் நிலையில், இந்த முன்பின் முரண் கருத்துக்கள் நாட்டை மேலும் மேலும் பாதாளத்துக்குள்தான் தள்ளும் என்பதை அதிகாரப் பிரதிநிதிகள் உணர்ந்துகொள்ள வேண்டும்.



# அரசிடம் ஒப்படைத்த எம் உறவுகள் எங்கே?

## காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக வவுனியாவில் நேற்றும் கவனவீர்ப்பு!






**வவுனியா, ஜூலை 1**

**காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வவுனியாவில் நேற்றும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.**

வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக காலை 10 மணிக்கு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'எங்கே எங்கே உறவுகள் எங்கே?', 'கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகள் எங்கே?' என்று கோஷங்களை எழுப்பியவாறும், பதாகைகளைத் தாங்கியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(ம-ப-110)

# குளத்திலிருந்து வெளியேறும் நீரை விவசாயத்துக்குப் பயன்படுத்தவும்

## சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 1



கிளிநொச்சி - ஸ்கந்தபுரம், மணியங்குளத்தில் இருந்து ஆண்டு தோறும் வெளியேறும் நீரை விவசாய முயற்சிகளுக்கு பயன்படுத்துவதற்கு அதிகாரிகள் திட்டமிட வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

இக்குளத்தின் கீழ் பெருமளவு விவசாய நிலம் உள்ளதன் காரணமாக நீரைச் சேமித்து வைத்து பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும். ஏனெனில் மழை காலங்களில் இக் குளத்தில் இருந்து கூடுதலான நீர் வீணாக கடலுடன் கலக்கவிடப்படுகின்றது. எனவே குளத்தின் நீரை விவசாய முயற்சிகளுக்கு பயன்படுத்துவதற்கான வழிகளை அதிகாரிகள் எடுப்பார்களானால் பெருமளவு நிலப்பரப்பில் விவசாய முயற்சிகள் மேற்கொள்ள முடியும் - என்றனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுகர்வுக்குத் தகுதியற்ற 2,000 கிலோ இறைச்சி!

வவுனியாவில் நேற்று மீட்பு

**வவுனியா, ஜூலை 1**

**மனித நுகர்வுக்குத் தகுதியற்ற முறையிலான 2 ஆயிரம் கிலோகிராம் கோழி இறைச்சி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் வவுனியாவில் நேற்று கைப் பற்றப்பட்டது.**

வட பகுதியில் விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட குறித்த இறைச்சி ஏற்றிய வாகனம் வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போதே குறித்த இறைச்சி மனித நுகர்வுக்குத் தகுதி அற்றது என்று கண்டுபிடிக்கப்பட்டது.

வாகனத்தில் போதியளவு குளிரூட்டி இன்மையால் இறைச்சி பழுதடைந்தது என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் 2 ஆயிரம் கிலோ இறைச்சியும் மீட்கப்பட்டது.

இறைச்சியைக் கொண்டு சென்ற நபர் கைதுசெய்யப்பட்டார். வாகனத்தையும், கைப்பற்றிய இறைச்சியையும் நீதிமன்றத்தில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ம-ப110)




## தென்மராட்சியில் 5 ஆயிரம் பேருக்கு 2 ஆம் கட்டத் தடுப்பூசி

சாவகச்சேரி, ஜூலை 1

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று வரை 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொவிட் -19 இரண்டாம் கட்டத் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டனர் என்று சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவால் முதலாம் கட்டத் தடுப்பூசி ஏற்றப்பட்டபோது 6 ஆயிரத்து. 55 பேர் தடுப்பூசியை ஏற்றிக் கொண்டனர். இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றப்பட்ட போது மக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர்.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம், கைதடி மத்திய மருந்தகம் மற்றும் கொடிகாமம் பிரதேச மருத்துவமனை ஆகியவற்றில் தடுப்பூசி ஏற்றப்பட்டது. படையினர் மற்றும் சுகாதாரப் பகுதியினர் இணைந்து தடுப்பூசியை ஏற்றினர். இன்றும், நாளையும் தடுப்பூசி ஏற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் பிரிவுகளில் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டபோது தவறவிட்டவர்கள் அருகில் உள்ள நிலையத்தில் ஏற்றலாமென சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ப-9)

## ரயில் சாரதிகளின் போராட்டம் நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 1

ரயில் பயணச்சிட்டைகளை மின்னணு முறையில் வழங்குவது தொடர்பான வேலைத்திட்டத்தை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரயில் சாரதிகள் நேற்று ஒருநாள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் அரச தரப்புடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுக்களை அடுத்து, வேலைநிறுத்தம் இடைநிறுத்தப்பட்டது. நேற்றுக் காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் சில மணித்தியாலத்துக்குப் பின்னர் நிறுத்தப்பட்டது.

இது தொடர்பில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்ற போதிலும், உரிய பதில் கிடைக்கவில்லை. அதனால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோம்.

இதனால் ரயில் பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு வருத்தம் தெரிவிக்கின்றோம் என்று ரயில் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக தொடம்கொட தெரிவித்துள்ளார். (4)

## வவுனியாவில் இ.போ.ச சாரதிக்கு கொரோனா

வவுனியா, ஜூலை 1

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலையைச் சேர்ந்த சாரதிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா மருத்துவமனைக்கு சிகிச்சைக்குச் சென்ற போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போதே அவருக்கு தொற்று உள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், அவருடன் தொடர்பைப் பேணிய இ.போ.ச ஊழியர்கள் மூவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை பயணத்தடையின் பின்னர் போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வட மாகாணத்தில் இ.போ.ச மற்றும் தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-110)



திருட்டுச் சம்பவம்

## விசாரிக்கச் சென்ற இருவர்மீது தாக்குதல்

சாவகச்சேரி,ஜூலை 1

திருட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரிக்கச் சென்ற இரு இளைஞர்கள் தாக்குதலுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நாவற்குழி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

நாவற்குழியில் உள்ள தேவாலயம் ஒன்றில் அண்மையில் திருட்டு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மதகுரு ஒருவர் அப்பகுதியில் உள்ளவர்களிடம் விசாரிக்கச் சென்றுள்ளார். அவருடன் நாவற்குழி 300 வீட்டுத்திட்டப் பகுதியைச் சேர்ந்த 25 மற்றும் 23 வயதுடைய இளைஞர்கள் இருவரும் சென்றுள்ளனர்.

தேவாலயத்துடன் தொடர்புடைய வீடுகளில் திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரித்தபோது, இவ் இரு இளைஞர்களும் அங்கு நின்றவர்களால் தாக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. தாக்குதலுக்கு இலக்கான இரு இளைஞர்களும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ-9)

## மடு பெருவிழாவுக்கு செல்வோருக்கு மன்னாரில் அன்டிஜென் பரிசோதனை

மன்னார், ஜூலை 1

மடுத் திருப்பதியின் ஆடி மாத பெருவிழாவானது இம்முறை அரசின் சுகாதார நடைமுறையின் அறிவுரைக்கு அமைவாக மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் விழா அன்று மடுவுக்குச் செல்வோருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மருதமடு அன்னையின் பெருவிழா நாளை காலை 6.15 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெறவுள்ளது.

பெருவிழாவில் குருநாகல் மறைமாவட்ட ஆயர் ஹரல்ட் அன்ரனி ஆண்டகை, கொழும்பு மறைமாவட்ட துணை ஆயர் அன்ரன் ரஞ்சித் ஆண்டகை ஆகியோர் கூட்டுத்திருப் பலியை ஒப்புக்கொடுக்கவுள்ளனர்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மன்னார் மறைமாவட்டத்தின் நான்கு மறைகோட்ட ரீதியாக ஆறு திருப்பலிகள் ஒப்புக் கொடுப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் கலந்துகொள்ள இருக்கும் பக்தர்களின் பெயர்கள் பங்குத் தந்தையர்களால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

மருதமடு அன்னையின் பெருவிழாவன்று அங்கு நடைபெறும் திருப்பலிகளில் பங்குபற்றச் செல்லும் அனைவருக்கும் சுகாதாரப் பிரிவினரால் நேற்று அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

தொற்று இல்லாதவர்கள் மட்டுமே பெருவிழாவுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.சி.ஆர். குறைந்தமைதான் தொற்று குறையக் காரணம்!

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு




**கொழும்பு, ஜூலை 1**

**நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்தமைக்குக் காரணம் பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைந்தமைதான் என்று தெரிவித்தார் ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிச.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா வைரஸ் தொடர்பான அரசின் செயலணி பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகின்றது. டெல்டா வைரஸ் நாட்டுக்குள் நுழைந்துள்ளது. டெல்டா பிளஸ் வைரஸ் ஆபத்தும் உள்ளது. இந்த நிலையில் செயலணி பொறுப்பற்றுச் செயற்படுகின்றது.

நாட்டில் நாளாந்தம் 3 ஆயிரத்து 500 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டவேளை, 28 ஆயிரம் பி.சி.ஆர். சோதனைகள் நாளாந்தம் இடம்பெற்றன. ஆனால் கடந்த வாரம் 14 ஆயிரம் பி.சி.ஆர். சோதனைகளே முன்னெடுக்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரத்தை மதிப்பிடுவதற்காக அரசு பி.சி.ஆர். சோதனைகளை அதிகரிக்க வேண்டும். எனவே சுகாதார நிபுணர்கள் அடங்கிய செயலணியை உருவாக்க வேண்டும்.

தற்போதைய செயலணி அரசியல் ரீதியான முடிவுகளை எடுப்பதற்காக, புள்ளிவிபரங்களை தனக்கு சாதகமாகப் பயன்படுத்துகின்றது என்றார். (ம-4)



# மத்திய கிழக்குக்கான தடை தற்காலிகமானது

## அரசு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து, இலங்கைக்கு வருகைதரும் பயணிகளுக்கான தடை தற்காலிகமானது என்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த பயணிகளில் நூற்றுக்கும் அதிகமானோருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது பல்வேறு நாடுகளிலும் வெவ்வேறு உருமாறிய வைரஸ் இனங்காணப்பட்டுள்ளதால், நாட்டு மக்களின் நலன் கருதியே மத்திய கிழக்கு உள்ளிட்ட மேலும் சில நாடுகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது- என்றார்.

பஹ்ரைன், கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், சவூதி அரேபியா குவைத் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளிலிருந்து பயணிகள் இலங்கைக்குள் பிரவேசிக்க எதிர்வரும் 13ஆம் திகதி வரை தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)




# மேலும் 6 பிரிவுகள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜூலை 1

நாட்டில் 4 மாவட்டங்களைச் சேர்ந்த 6 கிராம சேவகர் பிரிவுகள் நேற்றுக் காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொவிட் 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானியும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் மொனராகலை மாவட்டத்தில் கனுல்வெல பகுதியும், கேகாலை மாவட்டத்தில் ஹல்லவ கிராமசேவகர் பிரிவின் நியதுருபொல இலக்கம் 1, 2, 3 மற்றும் 4 ஆகிய தோட்டப் பகுதிகளும், கன்னகம கிராமசேவகர் பிரிவின் தேவாலகந்த தோட்டப் பகுதி மற்றும் கொடம்பல கிராம சேவகர் பிரிவின் பபேகம தோட்டப் பகுதி ஆகியவையும், களுத்துறை மாவட்டத்தில் எலதூவ கிராம சேவகர் பிரிவின் எலதூவ தோட்டப் பகுதியும், காலி மாவட்டத்தில் பழைய கொலனி கிராம சேவகர் பிரிவின் திவிதுரு தோட்டமும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை 4 மாவட்டங்களைச் சேர்ந்த 6 பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப் பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# இரண்டு மாதங்களில் இயல்புநிலை வருமாம்

## அரசு நம்பிக்கை



கொழும்பு, ஜூலை 1

கொரோனாத் தொற்றுநோயைக் கட்டுப்படுத்தி, இன்னும் 2 மாதங்களுக்குள் நாட்டு மக்களின் வாழ்க்கை இயல்புநிலைக்குக் கொண்டுவரப்படும் என்று அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாவின் மூன்றாவது அலை இன்று ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது நாடு முழுவதும் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. உலக நாடுகள் கொரோனாவைக் கட்டுப்படுத்துகின்றன. சட்டங்களையும் தளர்த்துகின்றன, எனவே இன்னும் இரண்டு மாதங்களில் இலங்கை மக்களையும் சாதாரணமாக செயற்பட அரசு அனுமதிக்கும் - என்றார். (4)

# கட்டுப்பாடுகளை மீறிய திருமணம்

## 20 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு, ஜூலை 1

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி, திருமண நிகழ்வொன்றில் பங்குபற்றிய 20க்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பாணந்துறை வடக்கு பள்ளமுள்ளப் பகுதியில் இந்தத் திருமணம் நடந்துள்ளது. இதனையடுத்து அவர்கள் அனைவரும் அவரவர் வீடுகளில் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (4)

# வர்த்தக நிலையங்கள் தடைகளை மீறித் திறப்பு

## கொரோனா பரவும் அபாயம்



கொழும்பு, ஜூலை 1

மேல் மாகாணத்தில் தடைகளை மீறி பல வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளமையால், கொரோனா மேலும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் தம்மிகா ஜயலத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆடை அணிகலன் வர்த்தக நிலையங்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றை முற்றாக மூடுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது தொடர்பில் மாகாண சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

தடைகளையும் மீறித் திறக்கப்பட்டிருக்கும் இவ்வாறான வர்த்தக நிலையங்களுக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கும் கொண்டுசென்றுள்ளேன். என்றார். கொரோனாத் தொற்றுப் பரவலைக் கவனத்தில் கொண்டு மேல் மாகாணத்திலுள்ள ஆடை அணிகலன் வர்த்தக நிலையங்கள் மற்றும் வணிக வளாகங்கள் ஆகியவை திறப்பதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளரால் தடைசெய்யப்பட்டு விசேட வர்த்தமானியின் ஊடாக அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு அடுத்த 10 வாரத்தில் டெல்டாவால் ஆபத்து

## இராஜாங்க அமைச்சர் மீண்டும் எச்சரிக்கை



**கொழும்பு, ஜூலை 1**

**பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்தாவிட்டால், இன்னும் 10 வாரங்களில் இலங்கைக்குள் பரவும் பிரதான வைரஸாக டெல்டா வைரஸ் திரிபு மாறக்கூடும் என்று இராஜாங்க அமைச்சர் விசேட மருத்துவ நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த வகை திரிபு வைரஸால் இறக்கின்றனர். அதனால்தான் தடுப்பூசி வேலைத் திட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அரசு தெளிவாகத் தீர்மானித்துள்ளது.

பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்தாவிட்டால், இன்னும் 10 வாரங்களில் இலங்கையில் பரவும் பிரதான வகை கொவிட் வைரஸான டெல்டா வைரஸ் திரிபு மாறக்கூடும். எனவே ஆபத்து நீங்கவில்லை. ஒரு புதிய எதிரி சுற்றித்திரிகின்றான்- என்றார். (ம-4)

# 433 பேர் கைது

கொழும்பு, ஜூலை 1

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் 433 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதற்கமைவாக இதுவரையான காலப்பகுதியில் இதே குற்றச்சாட்டுக்களில் 45 ஆயிரத்து 532 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கொழும்புக்கான 14 நுழைவாயில்களில் 3 ஆயிரத்து 200 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 59 வாகனங்கள் மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடுகளை மீற முயற்சித்தமைக்காக திருப்பி அனுப்பப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)

## இரு மில்லியன் சைனோஃபோர்ம் இந்த வாரத்தில்

கொழும்பு, ஜூலை 1

இரண்டு மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் இந்த வாரம் இலங்கைக்கு வழங்கப்படும் என்று இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 2ஆம் மற்றும் 4ஆம் திகதிகளில் குறித்த தடுப்பூசிகள் இலங்கைக்குக் கிடைக்கும் என்று சீனத் தூதரகம் தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது. இதேவேளை இலங்கையில் மொடேர்னா தடுப்பூசியை அவசரத் தேவைக்காகப் பயன்படுத்த தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளது. (4)

## தடுப்பூசியில் புறக்கணிக்கப்பட்ட கல்முனையில் கொவிட் தீவிரம்

### முதல்வர் ஏ.எம்.றகீப் ஜனாதிபதிக்கு கடிதம்

கல்முனை, ஜூலை 1

கல்முனை மாநகர பிரதேசங்களில் கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதால், அதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அவசரமாக கொவிட் தடுப்பூசிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் உள்ளதாவது:

நீங்கள் மேற்கொண்ட முயற்சியால் இம்மாத முற்பகுதியில் மாத்திரம் 4 இலட்சம் சைனோபோர்ம் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டு, சுகாதார அமைச்சால் அவை நாடு முழுவதும் மாவட்ட மட்டத்தில் ஏக காலத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டு, தேவையுடைய மக்களுக்கு வெற்றிகரமாக ஏற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் கிழக்கு மாகாணத்தின் 3 சுகாதாரப் பிராந்தியங்களுக்கும் 75ஆயிரம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டபோதிலும் கல்முனைப் பிராந்தியம் உள்வாங்கப்படாமல் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

இப்புறக்கணிப்பானது இப்பகுதி மக்களிடையே பெரும் விமர்சனங்களையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கின்றது. எனினும் அப்போது இங்கு கொரோனா வைரஸ் தொற்று வீதம் குறைந்தளவில் இருந்தமையாலேயே கல்முனைப் பிராந்தியத்துக்கு தடுப்பூசி கிடைக்கவில்லையென பிராந்திய சுகாதாரத் தரப்பினரால் கூறப்பட்டது. கல்முனை மாநகர பிரதேசங்களில் கடந்த சில வாரங்களாக நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்து வருவதுடன் மரணங்களும் நிகழ்ந்து வருகின்றன.

தற்போது கல்முனையின் இந்த நிலைவரமானது பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கின்றது. இப்பகுதியில் தடுப்பூசி ஏற்றப்பட வேண்டியவர்களுக்கு அது கிடைக்காமல் தவிர்க்கப்பட்டதன் விளைவே இத்தொற்றுப் பரவல் அதிகரிப்புக்கு காரணமாக இருக்கலாம் என அச்சம் வெளியிடப்படுகிறது.

எனவே இனியும் தாமதிக்காமல் இத்தொற்றில் இருந்து இப்பகுதி மக்களைப் பாதுகாப்பதற்காக கல்முனை மாநகர சபைக்கு போதியளவு தடுப்பூசிகள் கிடைப்பதற்கு அவசரமாக ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (ப-30)

## கிழக்கு மாகாண மருத்துவமனைகளுக்கு 200 ஒட்சிசன் கருவிகள்!

திருகோணமலை, ஜூலை 1

கிழக்கு மாகாணத்திலுள்ள 20 மருத்துவமனைகளில் இயங்கும் கொரோனா அவசர சிகிச்சைப் பிரிவுகளுக்கு 100 ஒட்சிசன் சிலிண்டர்களும், 100 ஒட்சிசன் றெகுலேற்றர்களும் வழங்கப்படவுள்ளன. தற்போதைய கொவிட் 3ஆம் அலையால், அதிகமான தொற்றாளர்கள் மூச்சுத் திணறலுக்குட் படுகின்ற வேளையில் நாடு முழுவதும் ஒட்சிசன் தேவை அதிகமாகியுள்ளது.

இந்த நிலையைக் கருத்தில் கொண்டு கிழக்கு மாகாணத்திலுள்ள 20 மருத்துவமனைகளுக்கு அமெரிக்க யூத உலக சேவை நிறுவனத்தின் 7.7 மில்லியன் ரூபா நிதி அனுசரணையுடன் 100 ஒட்சிசன் சிலிண்டர்களும், 100 ஒட்சிசன் றெகுலேற்றர்களும் வழங்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்ட நிகழ்வாக 9 மருத்துவமனைகளுக்கு எதிர்வரும் 5ஆம் திகதி இவை வழங்கப்படவுள்ளன. (ஐ-40)

## விகாரையொன்றில் 29 தொற்றாளர்கள்

கொழும்பு, ஜூலை 1

கணேவட்ட பண்டைய விகாரையொன்றில் 26 துறவிகள் உள்ளிட்ட 29 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வட்டுவ பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

குறித்த விகாரையில் வசிக்கும் 9 துறவிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜென் பரிசோதனையில், 5 துறவிகளுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதனையடுத்து அங்கு பணிபுரியும் ஏனைய துறவிகள் உட்பட 83 பேருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் துறவிகள் உட்பட 24 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அனைவரும் இராணுவப் பாதுகாப்பின் கீழ் களுத்துறையில் உள்ள ஒரு சிறப்பு சிகிச்சை மையத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

## கிழக்கு மாகாணத்தில் மட்டும் 24 மணிநேரத்தில் 244 தொற்று

**ஐவர் உயிரிழப்பு**

திருகோணமலை, ஜூலை 1

கிழக்கு மாகாணத்தில் நேற்றுமுன்தினம் தொடக்கம் நேற்று வரையான 24 மணித்தியாலயத்தில் 244 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர், தொற்றுக்கு உள்ளான ஐவர் உயிரிழந்துள்ளனர் என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்றுமுன்தினம் வரையான 24 மணி நேரத்துக்குள் திருகோணமலை மாவட்டத்தில் 56 பேரும் மட்டக்களப்பில் 127 பேரும் அம்பாறையில் 12 பேரும், கல்முனையில் 49 பேரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பில் நால்வரும் அம்பாறையில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். மொத்தமாக மூன்றாம் அலையால் கிழக்கில் ஆயிரத்து 734 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 239 மரணங்கள் கிழக்கு மாகாணத்தில் பதிவாகியுள்ளன -என்றார். (ப)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல்கலை மாணவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகள்

## உபவேந்தர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 1

**நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசிகளைச் செலுத்துமாறு, பல்கலைக்கழக உபவேந்தர்கள், கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கல்வி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அத்துடன், பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி முழுமையாகச் செலுத்தப்படவேண்டும் என்றும் உபவேந்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுகாதாரப் பரிந்துரைகளுக்கு அமைய விரைவாக பல்கலைக்கழக கல்வியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு தற்போது முன்னெடுக்கப்படும் ஒழுங்குபடுத்தப்பட்ட கற்பித்தல் செயற்பாடுகளில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ள பரீட்சைகளை சுகாதார முறையில் முன்னெடுப்பது உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன. (ம-4)

## சாணிக்குழிக்குள் மூழ்கி ஆண் குழந்தை இறப்பு!





ஹற்றன், ஜூலை 1

மாட்டுச் சாணியைக் கொட்டுவதற்காக, வீட்டுத்தோட்டத்தில்வெட்டப்பட்டிருந்த குழிக்குள் விழுந்து இரண்டரை வயதான ஆண் குழந்தை யொன்று உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் மஸ்கெலியா ப்ரௌண்ஸ்வீக் தோட்டத்தில் நடந்துள்ளது.

வீட்டுக்குள் இருந்த குழந்தையைக் காணாது பெற்றோர் தேடியபோது, குழந்தை வீட்டுத்தோட்டத்திலுள்ள சாணியைக் கொட்டுவதற்கான கழிவுக்குழியில் விழுந்திருப்பதை அவதானித்தனர். குழந்தையை மீட்டு மஸ்கெலியா மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

குழந்தையின் தாய் குருநாகல் பகுதியிலுள்ள வீடொன்றில் வீட்டுப் பணிப்பெண்ணாக தொழில்புரிகின்றார். தந்தையின் அரவணைப்பிலேயே குழந்தை வளர்ந்துள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். (ம-4,44)

## ஒக்ரோபர் மாதம் உயர் தரப் பரீட்சை

கொழும்பு, ஜூலை 1

கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இடம்பெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

உரிய சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி பரீட்சை நடத்தப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான பெறுபேறுகள் இது வரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4)

## இணையத்தில் சிறுமி விற்பனை: தாயார் உள்ளிட்ட 17பேர் கைது

### மேலும் 20 பேர் தொடர்பு

கொழும்பு, ஜூலை 1



இணையம் மூலம் 15 வயதுச் சிறுமி பாலியல் தேவைக்காக விற்பனைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாயார் உள்ளிட்ட 17 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் 20 பேர் இந்த வலைப்பின்னலுடன் தொடர்புபட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சிறுமியின் தாய், மற்றொரு பெண், சிறுமியை பாலியல் தொழிலுக்கு அழைத்துச் சென்ற வாகனச் சாரதிகள் இருவர், சிறுமியின் புகைப்படங்களை இணையத்தில் வெளியிட்ட நபர்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகப்படுத்திய நபர்கள் என 17 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சிறுமியை சுமார் மூன்று மாதங்களாக பாலியல் தேவைக்காக இணையங்களில் விற்பனைசெய்துள்ளனர்.

சிறுமி ஒருவரை வாடகை வீட்டில் அடைத்து வைத்து துர்நடத்தைக்கு உட்படுத்துகின்றனர் என்று கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து சிறுமியும், சிறுமியை வழிநடத்திய நபரும் கைதுசெய்யப்பட்டனர். மேலதிக விசாரணைகளில் 16 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## இணையவழிக் கற்றல்விருத்தி: யாழ்ப்பாணத்தில் கலந்தாய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 1

பாடசாலை மாணவர்களுக்கான இணைய வழிக் கற்றலை விருத்திசெய்வது தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது இணைய வழியில் கற்றலை மேற்கொள்வதற்கு மாணவர்களுக்கு உள்ள பிரச்சினைகள் மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் மாவட்டச் செயலர் க.மகேசன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் உதயகுமார், வலய கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-20)

## 20 அலைவரிசைகளில் கற்பித்தல் செயற்பாடு



கொழும்பு, ஜூலை 1

20 தொலைகாட்சி அலைவரிசைகளின் ஊடாக, மாணவர்களுக்கு வீடுகளிலிருந்தே கல்வி கற்பதற்கான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இடர்கள் மற்றும் தற்போதைய கொரோனாத் தொற்று பரவல் அச்சுறுத்தலுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில், தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாக மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

பாடசாலைகளைப் போன்று காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறும். அதேவேளை தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைக்கு முன்னுரிமை அளித்து, பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (ம-4)

## பாடசாலைகள் ஆரம்பித்ததும் சேதனப்பசளைத் தோட்டங்கள்

### கிழக்கு ஆளுநர் திட்டம்

திருகோணமலை, ஜூலை 1

பாடசாலைகள் தொடங்கிய பின்னர் கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் மாதிரி சேதனப்பசளைத் தோட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்க ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எடுத்த முடிவை உண்மையாக்குவதற்கு இது செயற்படுத்தப்பட வேண்டும். இந்தப் புதிய கருத்தை மாணவர்களின் இதயங்களில் அறிமுகப்படுத்துவதன் மூலம், நாட்டின் எதிர்கால தலைமுறை நிச்சயமாக நிலையான விவசாயத்தை நோக்கி நகரும். பாடசாலைகள் தொடங்குவதற்கு முன்னர் இது குறித்து அனைத்து அதிபர்களுக்கும் தக



வல் தெரிவிக்க வேண்டும். சேதனப்பசளைச் செய்கை விவசாயம் குறித்து மாணவர்களுக்கு வாரத்துக்கு ஒரு காலமாவது கற்பிக்க பாடசாலைப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் - என்றார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கு

# அத்தியாவசிய நிவாரணப் பொருள்கள் உரிய நேரத்தில் வழங்கப்படுவதில்லை

### மன். நகர சபை உறுப்பினர் குற்றச்சாட்டு



**மன்னார், ஜூலை 1**

**மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக் காரணமாக சுயதனிமைப்படுத்தப்படுகின்ற குடும்பங்களுக்கு அரசால் வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள் உரிய நேரத்தில், உரிய முறையில் வழங்கப்படுவதில்லை என மன்னார் நகர சபை உறுப்பினர் திருமதி சிறிதரன் அந்தோனியம்மா குற்றம் சுமத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைத் தனிமைப்படுத்திவிட்டு அவர்களை வெளியே செல்ல வேண்டாம் எனத் தெரிவிக்கின்றனர். அதனால் அத்தியாவசிய பொருள்களை வாங்க முடியாத நிலை ஏற்படுகின்றது. அவ்வாறு தனிமைப்படுத்தினாலும் அரசால் வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்களைக்கூட உரிய அதிகாரிகள் முதல் வாரத்தில் வழங்குவதில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களும், பொது அமைப்புக்களும் அரசால் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன என்று நினைத்து அவர்களைக் கருத்தில் கொள்வதில்லை. இதனால் தனிமைப்படுத்தப்பட்ட எத்தனையோ குடும்பங்கள் பசிபட்டினியால் வாடுகின்றன. இந்த அரசு தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருள்கள் வழங்குகின்றது என்று செய்திகள் வெளிவந்தாலும் மன்னார் மாவட்டத்தில் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் மாத்திரமே வழங்கப்படுகின்றன. அதுவும் தனிமைப்படுத்தப்பட்டு 10 நாள்கள் கடந்த பின்னரே வழங்கப்படுகின்றன.

முதல் வாரத்திலேயே தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அத்தியாவசியப் பொருள்கள் இல்லாமலும் வாங்க முடியாமலும் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மன்னார் மாவட்டத்தில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த விடயம் தொடர்பாக உடனடியாக கவனம் செலுத்தி அரசால் வழங்கப்படுகின்ற 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை முழுமையாகவும் உரிய நேரத்திலும் வழங்க முன்வர வேண்டும் - என்றார்.

(ப-56)



## இரு நாள்களில் 504 பேருக்கு வவுனியாவில் பி.சி.ஆர்.

வவுனியா, ஜூலை 1

வவுனியாவில் இரு தினங்களில் 504 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்திலும் கொவிட் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த சுகாதாரப் பிரிவினர் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். அதன் ஒரு கட்டமாக கடந்த திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய இரண்டு நாள்களில் 504 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வவுனியா, கல்மடு பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த 287 பேருக்கும், தவசிகுளம் பகுதியில் 217 பேருக்கும் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் முடிவுகளையடுத்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(ப-18)



கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட உடுப்பிட்டி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 30 குடும்பங்களுக்கும், வல்வெட்டித்துறை நகரசபையின் சுகாதார தொழிலாளர்கள் 30 பேரின் குடும்பங்களுக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தால் உலருணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன. (ஐ-159)

## 20 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

வவுனியா,ஜூலை 1

பயணத்தடை காரணமாக தொழில்களை இழந்த வவுனியா அம்மாச்சி உணவகத்தில் பணியாற்றும் 20 குடும்பங்களுக்கு அண்மையில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

வவுனியா ஜனனம் அறக்கட்டளை நிதியத்தினர் விடுத்த வேண்டுகோளையடுத்து யாழ்ப்பாணம் பீதாம்பரம் அறக்கட்டளை நிதியத்தினரால் இவ் உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-9)



## தலைமன்னாரில் 368 பேருக்கு பி.சி.ஆர் சோதனை

மன்னார், ஜூலை 1

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்த கொரோனாத் தொற்றுக் காரணமாக தலைமன்னார் பியர் மேற்கு மற்றும் பியர் கிழக்கு ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகள் கடந்த வாரம் முடக்கப்பட்ட நிலையில், அப்பகுதியில் 368 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை தலைமன்னார் பியர் பகுதியில் 62 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், குறித்த இரு கிராம அலுவலகர் பிரிவுகளும் மறுஅறிவித்தல் வரை முடக்கப்பட்டன. இந்த நிலையிலேயே மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனை ஆகியவை இணைந்து பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்தன.

மாதிரிகள் கொழும்பு முல்லேரியா மருத்துவமனைக்கு பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மாதிரிகளில் தொற்று உறுதிசெய்யப்படும் பட்சத்தில் தொற்று உறுதி செய்யப்பட்ட நபர்களின் முதல் நிலைத் தொடர்பாளர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-56)



கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 65 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள விநாயகர் குடியிருப்பில் 20 குடும்பங்களுக்கும், ஐயனார் குடியிருப்பில் 45 குடும்பங்களுக்கும் கிளிநொச்சி திருநெறிக் கழகத்தால் மேற்படி உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ-13)

## 150 கடலாமைகள் 15 டொல்பின்கள் கரையொதுங்கின

கொழும்பு, ஜூலை 1



இலங்கைக் கடற்பரப்பில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதை அடுத்து, இதுவரை சுமார் 150 கடல் ஆமைகளும், 15 டொல்பின்களும் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன என்று வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு இறந்த கடல் ஆமைகளின் உடல்கள் மேலதிக விசாரணைகளுக்காக, அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றின் இறப்புக்கான காரணத்தைக் கண்டறிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைவானில் கடத்தி கணவருக்கு சித்திரவதை

### பெண்ணொருவர் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 1

வெள்ளை வானில் வந்த சிலர் தனது கணவரைக் கடத்தி சித்திரவதைசெய்து, வீதியில் விட்டுச்சென்றுள்ளனர் என்று நுரைச்சோலை பனியடி பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்துள்ளார்.

இராணுவச் சீருடையை ஒத்த சீருடை அணிந்த நால்வரும், சிவில் உடையில் வந்த ஒருவரும் எனது கணவரைக் கடத்திச்சென்றனர் என்று அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். கடத்தப்பட்ட நபர் கடுமையாகத் தாக்கப்பட்டு இளந்தடி கடற்கரையோரமாகக் கைவிடப்பட்டுள்ளார். அவர் புத்தளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேவேளை கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டது என்று கூறப்படும் வெள்ளை வானொன்று புத்தளம் ரயில் வீதியில், விபத்துக்கு உள்ளான நிலையில் மீட்கப்பட்டுள்ளது. அதில் இராணுவச் சீருடை, தொப்பி, அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் பணம் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-4)

# சர்வதேச ஆதரவை இழக்கும் இலங்கை

### ஐக்கிய மக்கள் சக்தி கடும் விமர்சனம்

கொழும்பு, ஜூலை 1

அனைத்து விடயங்களிலும் தோல்வி கண்டுள்ள இந்த அரசுக்கு உதவுவதற்கு, சர்வதேச நாடுகள்கூட முன்வருவதில்லை. சர்வதேசத்தின் ஆதரவை தற்போதைய அரசு இழந்து வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருடங்களாகின்றன. எனினும், பொருளாதாரம் உரிய வகையில் முகாமை செய்யப்படவில்லை. கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதிலும், அரசியல் காரணிகளிலும்கூட அரசுக்கு தோல்வி ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல சர்வதேசத்தின் ஆதரவையும் இழந்து வருகின்றது. இராஜதந்திர நடவடிக்கை மூலம் தடுப்பூசியைக் கூட பெற முடியாதுள்ளது. ஜப்பானிடமிருந்து தடுப்பூசி கிடைக்கும் என்றார்கள். ஆனால் இன்னும் வழங்கப்படவில்லை. ஆனால் ஜப்பான் வியட்னாமுக்கு தடுப்பூசி வழங்கியுள்ளது. அதேபோல் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையும் இல்லாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தவறான முடிவு, முறையற்ற முகாமைத்துவம் உள்ளிட்ட காரணங்களால் நாடு அபாய கட்டத்தை நோக்கி நகர்கின்றது. கொரோனா ஒருபுறம், மறுபுறத்தில் அனைத்து மாகாணங்களிலும் வறுமை தலைதூக்கி வருகின்றது. மக்களுக்கு உண்பதற்கு உணவு இல்லாத நிலையும் ஏற்பட்டுள்ளது - என்றார். (ம-4,44)

# குமார வெல்கம அரசோடு இணையார்

### ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 1



குமார வெல்கம புதியதொரு அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்பினால்கூட எம்முடனேயே கூட்டணி வகிப்பார் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், குமார வெல்கமவின் புதிய அரசியல் நகர்வுகள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு, நாடாளுமன்ற உறுப்பினரான துஷார இந்துனில் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜபக்சக்களின் அரசியல் நடவடிக்கை தொடர்பில் குமார வெல்கமவுக்கு நன்கு தெரியும். அதனால்தான் எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு கடந்த தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சக்தியில் அவர் இணைந்தார். எமது கூட்டணியில் அவர் அங்கம் வகித்தாலும் அவரின் கட்சி பின்புலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியாகும். மொட்டுக் கட்சியின் பயணம் தொடர்பில் தற்போதும் அவர் அதிருப்தியிலேயே இருக்கின்றார். புதிய அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்பினாலும் எம்முடனேயே கூட்டணி வகிப்பார். அவர் பலமடைய பலமடைய ஐக்கிய மக்கள் சக்தியும் வலுபெறும் - என்றார். (ம-4,44)

# நில விற்பனையை நிறுத்தாவிடில் நாடு முழுவதும் வேலைநிறுத்தம்

### தபால் ஒன்றியம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 1

கொழும்பில் தபால் திணைக்களத்துக்குச் சொந்தமான அதிக மதிப்புள்ள நிலங்களை அரசு கையகப்படுத்தி, அவற்றை நிறுவனங்களுக்கு விற்பனைசெய்யும் நடவடிக்கையை நிறுத்தாவிட்டால் நாடு முழுவதும் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தை மேற்கொள்வோம் என்று ஐக்கிய தபால் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அதன் தலைவர் சிந்தக பண்டாரா தெரிவிக்கையில்,

ஜனாதிபதி செயலகத்துக்கு அருகிலுள்ள கொழும்பு பொதுத்தபால் அலுவலகக் கட்டடம், டி.சி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் உள்ள தபால் தலைமையகக் கட்டடம், லோட்டஸ் வீதியில் ரெலிகொம் கட்டடத்துக்கு அருகிலுள்ள கட்டடம், தபால் அதிகாரிகளின் தனிப்பட்ட கோப்புகள் மற்றும் தபால் ஒன்றிய அலுவலக வளாகம் ஆகியவற்றைக் கையகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

மேலும், வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக ஜெயவர்தனபுர மற்றும் கடுவேல பகுதியில் அமைந்துள்ள நிலங்களைக் கையகப்படுத்தும் திட்டங்களும் உள்ளன. தபால் திணைக்களத்தின் நிலங்களைக் கொள்ளையடிப்பதை உடனடியாக நிறுத்துமாறு அரசிடம் கூறுகிறோம். தபால்களைச் சேமிக்க வீதிகளில் இறங்க நாங்கள் தயாராக உள்ளோம். கொரோனாத் தொற்றுக் காரணமாக நாங்கள் அமைதியாக இருந்தோம். ஆனால் இனியும் அமைதியாக இருக்கத் தயாராக இல்லை- என்றார். (ம-4)



# கைக்குண்டுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜூலை 1

பல்வேறு குற்றச் சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டுவந்த ரத்மலானை அஞ்சு என்பவரின் உதவியாளர், கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

டுபாய்க்கு தப்பிச் சென்ற 22 வயதுடைய மதுஷங்க சில்வா அல்லது மத்தா என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்த கைக்குண்டும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# அரசைக் கைப்பற்ற ரணில் முயற்சி

### அமைச்சர் காமினி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அடுத்த முறை அரசைக் கைப்பற்றலாம் என்ற கனவுடனே நாடாளுமன்றுக்கு வருகைதந்துள்ளார் என்று அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்கள் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்கிறார்கள் என்பது அரசுக்குப் புரியாமல் இல்லை. ஆனால் உலகம் முழுவதிலும் இதே பிரச்சினையே காணப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அடுத்த முறை தனக்கு வாக்குகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். ஐக்கிய தேசிய மக்கள் சக்தியும் தங்களுக்கு இல்லாது போயுள்ள ஆசனங்களை, அடுத்த தேர்தலில் பெற்றுக்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கின்றது.

மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனியாக நாடாளுமன்றுக்கு வந்து, அடுத்த முறை அரசைக் கைப்பற்றலாம் என்று நினைக்கின்றார். ஆனால் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அரசு நாட்டை



நன்றாக நிர்வகித்து வருகின்றது. கொரோனாவை வைத்து அரசியல் செய்ய முடியாத நிலை எதிர்க்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது - என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொற்று...

என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது. இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 59 ஆயிரத்து 89 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்த வர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 25 ஆயிரத்து 952 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக மருத்துவமனைகள் மற்றும் இடைநிலை சிகிச்சை மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 60 ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

சாவு....

தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது. இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 77 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் சாவடைந்த 47 பேரில் 16 ஆண்களும், 31 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

உயிரிழந்த ஆண்களில் 13 பேர், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். இருவர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள். ஒருவர் 30 வயதுக்குக் குறைவானவர். அதேவேளை, பெண்களில் 21 பேர், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். 10 பேர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

பஸ்ஸை....



தது. அதன்போது, மின் கம்பம் முறிந்ததால், அந்தப் பகுதி இரவிரவாக இருளில் மூழ்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

டிப்பர் பஸ்ஸை மோதியபோது, பஸ் கடையொன்றின் முன்பக்கத்தை உடைத்துக்கொண்டு சென்றது. அதனால் பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடி நொறுங்கியது. முகப்புப் பக்கமும் சேதமாகியது. பஸ்ஸின் பின்புறமாக டிப்பர் மோதியதால், பஸ்ஸின் பின்புறமும் சேதமடைந்தது. இதன்போது, டிப்பரின் முன்பக்கமும் கடும் சேதமடைந்தது.

டிப்பர் சாரதி காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பொலிஸார் விசாரணை மேற்கொள்கின்றனர். (த-26)

நிறைவேற்று...

தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

"தேர்தல் முறைமை சீர்திருத்தம் ஊடாக நாட்டை மீண்டும் இரு கட்சி முறைமைக்கு கொண்டுசெல்வதற்கே தற்போதைய அரசு முயற்சிக்கின்றது.

நாட்டில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தேர்தல் முறைமை மாற்றங்களில் விகிதாசார தேர்தல் முறைமையே முற்போக்கான, ஜனநாயகமான தேர்தல் முறைமையாக விளங்குகின்றது. இந்த முறைமையை மாற்றுவதாக இருந்தால் தற்போது இருப்பதைவிடவும் மேலும் சிறந்த முற்போக்கான, ஜனநாயகம்மிக்க புதிய முறைமையாகவே இருக்கவேண்டும்.

உள்ளூராட்சி சபை, மாகாணசபை, நாடாளுமன்றம் ஆகியவற்றில் சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவமும் மக்களின் சார்பில் இருக்கவேண்டும்.

அதேபோல அனைத்து தேர்தல்களுக்கும் சம முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும். ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமும் இதுதான்.

அதேவேளை, எல்லை நிர்ணயப் பிரச்சினையால் மாகாணசபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே, பழைய முறைமையின்கீழ் அதற்கான தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது.

விகிதாசார தேர்தல் முறைமையின்கீழ் தெரிவாகும் நாடாளுமன்றம் பலவீனமாக இருந்தால் அதனை சமநிலைப்படுத்துவதற்காகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இருக்கின்றது. எனவே, விகிதாசார தேர்தல் முறைமையில் மறுசீரமைப்பு இடம்பெறுமானால் கட்டாயம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும்.

உள்ளூராட்சிமன்றம், மாகாணசபை மற்றும் நாடாளுமன்றம் ஆகிய மூன்றுக்கும் ஒரே தேர்தல் முறைமை இருக்கவேண்டும். எமது யோசனைகள் தெரிவிக்குழுவில் முன்வைக்கப்படும். ஏனைய கட்சிகள் மற்றும் அமைப்புகளை சந்திக்கவும் திட்டமிட்டுள்ளோம்." என்றார். (த-44)

மீண்டும்...

இந்தநிலையில், இலங்கையில் மீண்டும் பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பதா? இல்லையா? என்கின்ற தீர்மானம் அடுத்த வாரத்தில் எடுக்கப்படலாம் என்று சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இலங்கையில் 'டெல்டா' மாறுபாடான கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட சிலர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் தொற்று மேலும் பரவக்கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இதில் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் கருத்துத் தெரிவிக்கையில், "டெல்டா மாறுபாடான தொற்று இலங்கையில் பரவியிருப்பதற்கான தெளிவான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. நாடளாவிய ரீதியில் பூகோள மட்டத்தில் எத்தனை பேருக்கு இந்தத் திரிபடைந்த தொற்று ஏற்பட்டிருக்கின்றது என்பது பற்றிய பரிசோதனைகள் தீவிரமாக நடத்தப்பட்டு வருகின்றன. ஏற்கனவே சில தொற்றாளர்கள் இந்த 'டெல்டா' மாறுபாடான தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்தவகையில் அவர்களைத் தவிர வேறு நபர்களுக்குத் தொற்று ஏற்பட்டிருப்பதற்கான எந்த உறுதிப்படுத்தக்கூடிய தகவலும் இதுவரை சுகாதார அமைச்சுக்குக் கிடைக்கவில்லை.

இருந்த போதிலும் நாடு முழுவதிலும் இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்துக்கிடமான நபர்களிடம் பரிசோதனை நடத்துதல் எனப் பல்வேறு முயற்சிகளை நாங்கள் நடத்தி வருகின்றோம்.

இந்நிலையில், நாடு முழுவதிலும் மீண்டும் பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பதா? இல்லையா? என்பது குறித்து அடுத்த வாரம் தீர்மானிக்கப்படும்.

ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட பயணக்கட்டுப்பாடு காரணமாகவே தற்போது நாளாந்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தை விடக் குறைந்திருக்கின்றது" என்றார். (த?22)


## வீடு வாடகைக்கு

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் 2 அறை, ஹோல், இணைந்த குளியல் அறை சிறிய குடும்பம், அல்லது தனி அறைகளாக (மருத்துவ பீட மாணவர்களுக்கு மட்டும்) வாடகைக்கு உண்டு.

தொடர்பு 077 064 8387

## வேலையாட்கள் தேவை

ஊர்காவற்றுறையில் உள்ள பலசரக்கு கடைக்கு அனுபவமுள்ள ஆண் வேலையாள் தேவை. வயது எல்லை 18-40 ஆக இருக்க வேண்டும்.

ஆரம்ப சம்பளம் 45000/=

T.P: 077 067 4452

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் திரு. இ.பாலச்சந்திரன்

மண்ணில் : 23.11.1943 விண்ணில் : 01.06.2021

நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த இளையதம்பி பாலச்சந்திரன் (Robert Agencies PVT Ltd) 01-06-2021ல் இந்தியாவில் இறை வனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி (விதானையார்) அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாணிக்கம் அன்னலச்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் வரலஷ்மியின் அன்புக் கணவரும், ஷகிலா(Canada), ஷாமிலா (India), தினேஷ்(Canada) ஆகியோரின் தந்தையும், Brent, கிருஷ்ணமூர்த்தியின் மாமனாரும், Andrew, சுவேதிகா ஆகியோரின் அன்பு பாட்டனாரும் வரதலஷ்மி, கௌரிஅம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரனும் குமாரசாமி, சோதிநாதன், பவானந்தன், சிவானந்தன், யோகலஷ்மி, மகாலஷ்மி, ஆனந்தன் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் மறைவிற்கு தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகள்.

தகவல் : குடும்பத்தினர் - 077-9120615


கொவிட்டை கட்டுப்படுத்த

# ரூ.262 பில்லியன் இதுவரை செலவு

கொழும்பு, ஜூலை 1

கொவிட்19 தொற்றை கட்டுப்படுத்துவதற்காக கடந்த வருடம் தொடக்கம் இதுவரை அரசு, 262 பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற நிதி அமைச்சின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, 2020-2024 காலப்பகுதியில் பங்குச் சந்தையில் புதிதாக 500 நிறுவனங்களை பட்டியிலிடுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த)

# கஞ்சாவுடன் கைது 10,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவருக்கு மல்லாகம் நீதிமன்று 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

சில தினங்களுக்கு முன்னர் 21 வயதுடைய இளைஞன் ஒருவர் 3 கிராம் கஞ்சாவுடன் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர், விசாரணையின் பின்னர் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அதன்போதே மேற்படி தண்டம் விதிக்கப்பட்டது (த-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவு சங்கப்பணியாளர் திரு.து.ரவி அவர்களின் அன்புத் தாயார்

**துரைசிங்கம் பூமணி**

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அளவெட்டி மல்லாம் ப.நோ.கூ.சங்கம்**
**ஊழியர் நலன்புரிச்சங்கம்**

## வேலையாட்கள் தேவை

பிரபல சோலர் (Solar) நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை. வயரிங் உதவியாளர், சோலர் (Solar) பொருத்தினருக்கு மாசம் ரூபா **25000/=** லிருந்து வழங்கப்படும்.
ஆவண வேலைகள் (வெளியக வேலைகள்) செய்ய மாசம் ரூபா **30000/=** லிருந்து வழங்கப்படும்.
வேலை நாட்கள் - 25 நாட்கள்.
தொடர்புகளுக்கு: **077 995 9363**


## யாழ்ப்பாணம் மாநகர சபை யாழ்ப்பாணம் நவீன சந்தையின் மேற்றளத்தின் நிலப்பகுதிகளை மாதாந்த வாடகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கான விலைமனுக்கோரல்

1. யாழ்ப்பாணம் நவீன சந்தையின் மேற்றளத்தின் கீழ்வரும் நிலப்பகுதிகளை மாதாந்த வாடகை அடிப்படையில் 05 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| நிலப்பகுதி | தரைப்பிரதேசம் (சதுர அடி) | அடிப்படை விலை (ரூபா) | மாதாந்த வாடகை (ரூபா) | பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|---|
| A | 3440 | 3,000,000.00 | 85000.00 | 50000.00 |
| B | 3440 | 3,000,000.00 | 85000.00 | 50000.00 |

2. இப் பகுதிகள் மாதாந்த வாடகை அடிப்படையில் 05 வருட காலத்திற்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களில் அதிகூடிய அடிப்படை விலையைக் கவனத்தில் கொண்டு குத்தகைதாரர் தேர்ந்தெடுக்கப்படுவர்.
3. கேள்விதாரர் பின்வரும் நிபந்தனைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.
   1. தங்களின் தேவைக்கேற்ற வகையில் அப்பகுதியை மாற்றியமைக்க முடியும். (கூரை திருத்த வேலை மட்டும் மாநகர சபையால் மேற்கொள்ளப்படும்)
   2. ஒப்பந்த கால முடிவில் எந்தவித நிபந்தனையுமின்றி, மாநகர சபைக்கு கையளித்தல் வேண்டும். தங்களது வியாபாரத்தின் தன்மைக்கேற்ப கழிவகற்றும் செயற்பாட்டிற்கு வசதியாக வரைபடத்தில் Open to Sky எனக் குறிப்பிடப்பட்ட பகுதியில் தங்களது சொந்த செலவில் கழிவகற்றும் தொட்டியை அமைக்க முடியும். அத்தொட்டியில் சேர்க்கப்படும் கழிவை கட்டணம் செலுத்தி அகற்றிக்கொள்ளலாம்.
   3. தங்களது பகுதிக்கு ஒதுக்கப்பட்ட மலசலகூடத்தின் பராமரிப்பு பணிகள் தங்களாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகள் குறித்த விபரங்கள், உள்ளடங்கிய விண்ணப்பங்களை, மீளளிக்கப்படாத ரூபா 2000/= இனை செலுத்தி மாநகர சபையின் வேலைப்பகுதியில் 2021.07.02 முதல் 2021.07.22 ம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.30 வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
5. மேற்படி நிலப்பகுதிகளை தாங்கள் பகுதி பகுதியாக குத்தகைக் காலப்பகுதியில் மாநகரசபையின் அனுமதியுடன் உப வாடகைக்கு வழங்க முடியும்.
6. விண்ணப்பதாரர் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தொகையை பிணை முறியாக செலுத்துதல் வேண்டும்..
7. விலை மனுக்களை ஏற்றல் 2021.07.22ம் திகதி பி.ப 2.30 மணிக்கு முடிவடைந்தவுடன் மாநகர சபையின் பௌதீக திட்டமிடல் கேட்போர்கூடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரிகள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இதற்காக சமூகமளிக்கலாம். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
8. இதுபற்றிய மேலதிக தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் யாழ்ப்பாணம் மாநகர சபை வேலைப்பகுதியின் 0212222019, 0212216468 ஆகிய தொலைபேசி இலக்கங்களிற்கு அல்லது அலுவலக நேரங்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 வரை விசாரித்து அறியலாம்.

தலைவர்,
பெறுகைக்குழு,
யாழ்ப்பாணம் மாநகர சபை

01.07.2021


## வேலையாட்கள் தேவை

யாழ் கொக்குவிலில் புதிதாக ஆரம்பிக்க உள்ள பல்பொருள் வாணிபத்திற்கு
1. போட்டோகொப்பி அடிக்கத் தெரிந்த தமிழ் ஆங்கில Typing தெரிந்தவர்கள்.
2. A/L வர்த்தகத்தில் சித்தியடைந்த பெண் ஊழியர்களும் தேவை.
3. Graphical Designing தெரிந்தவர்கள்
ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: **076 855 4077**

## வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் இயங்கிவரும் **Thenu Supermart** நிறுவனத்திற்கு
- காசாளர் (பகல்) பகுதி நேரம்
- பொருட்காட்சி படுத்துனர்
- உதவியாளர்
- பொதி அடிப்புனர்
- கணக்காளர்

T.P: 077 711 0075, 021 493 0118
நேர்முகத் தேர்வு : இன்று 01.07.2021
இடம் : Thenu Supermart

## சேவை நலன் பாராட்டு

**திருமதி யுகசோதியம்பிகை விசாகப் பெருமாள்**

எமது கல்லூரியில் அளப்பரிய சேவையாற்றி 31 வருட ஆசிரிய சேவையை நிறைவு செய்து இன்று




(01.07.2021) வியாழக்கிழமை ஓய்வு பெறும் எமது ஆசிரியர் அவர்கள் தனது ஓய்வு காலத்தில் புகழோடும் குடும்ப மகிழ்வோடும் சகல நலங்களும் பெற்று நீடூழி வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:

**சேவையாளர்கள் சங்கம்**
**யா/ மகளிர் கல்லூரி, சாவகச்சேரி**


## அறிவித்தல்
## மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்குமாகாணம்.

**01. வடக்கு மாகாண பொதுச்சேவையின் ஆய்வு உத்தியோகத்தர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2021**

மேற்படி பதவிக்கான மாற்றியமைக்கப்பட்ட விளம்பரத்தை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளத்தில் பார் வையிடலாம்

**02. வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - 1(அ) தரத்திற்கு வழிகாட்டலும் ஆலோசனையும் பாட ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட் சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021**

மேற்படி பதவிக்கான மாற்றியமைக்கப்பட்ட விளம்பரத்தை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

மேற்படி இரு பதவிகளுக்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.07.20 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

சி.திருவாகரன்
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
01.07.2021





இல - 245. பலாலி வீதி கந்தர்மடத்தில் இயங்கிய எமது நிறுவனம் புத்தம் புது பொலிவுடன் இல - 91, பலாலி வீதி திருநெல்வேலியில் இயங்குகின்றது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்

# பேபி போட்டோ
## போட்டோ அன் வீடியோ
BABY PHOTO &VIDEO

கலர் பிறிண்டிங்
அல்பம்
கிறிஸ்டல் பிறேம்
லேசர் கட்டிங்
பிளாஸ்ரிக் ஐடி காட்
ரீ-சேட் பிறிண்டிங்
மக் பிறிண்டிங்
போட்டோ கொப்பி
லெமினேற்றிங்

உங்கள் மழலை செல்வங்களின் உயிரோவியமான புகைப்படங்களுக்கு




எமக்கு வேறு எந்தவொரு கிளையும் இல்லை
என்பதை எமது வாடிக்கையாளர்களிற்கு அறியத்தருகின்றோம்
T P - 021 222 6912 , 0761419308


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 27 . 11 . 1941

உதிர்வு 01 . 06 . 2021



ஆதி மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### யோகேஸ்வரி சிவசுப்பிரமணியம் (மைனாக்கா)

இன்று 31ஆம் நாள் ஆகிவிட்டது. எங்கள் அம்மா! அம்மா! என்கின்றோம். உங்கள் பிள்ளைகள் எங்கள் அம்மம்மா அம்மம்மா என்கிறார்கள் பேரப்பிள்ளைகள் மற்றையோர் மாமி, மைனாக்குஞ்சாச்சி, மைனாக்கா, மைனா என்று இன்னமும் உங்களை அவரவர் அழைத்தவாறுள்ளோம். எங்கள் அம்மா மரணித்த செய்தி கேட்டு Covid 19 கெடுபிடிகள் வேலைப்பளுக்கள் எல்லாவற்றையும் ஒரு புறம் தள்ளி வைத்துவிட்டு வந்த உறவுகளுக்கும் (கோடி கோடி நன்றிகள்) பத்திரிகையில் நினைவஞ்சலி செலுத்தியோருக்கும், மலர்வளையம் வைத்தோர்க்கும் ஆதரவளித்து ஆறுதல் கூறியோர்க்கும், தொலைபேசி மூலம் கதைதோர்க்கும், Zoom மூலம் எங்கள் அம்மாவின் மரண நிகழ்வில் கலந்து கொண்ட அன்புள்ளங்களிற்கும் கோடி கோடி நன்றிகள். கட்டுப்பாட்டுடன் மரண நிகழ்வை நிகழ்த்த அனுமதித்த சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேச வைத்திய அதிகாரி, கிராம சேவையாளருக்கும் நன்றிகள்.

வீட்டுக்கிருத்திய நிகழ்வு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மதியபோசன விருந்து எல்லாவற்றிலும் உங்கள் அனைவரையும் அழைக்க முடியாதுள்ளது Covid 19 இன் கட்டுப்பாடுகளை அனுசரிக்க வேண்டியுள்ளது என்பதை மன வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

077 666 8741, 077 191 2309 — குடும்பத்தினர்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10.09.1933

மறைவு 27.06.2020

### அமரர் திருமதி கமலாதேவி வேலாயுதம்

அன்னார் குப்பிளானைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி. கமலாதேவி வேலாயுதம் அவர்கள் வசித்துவந்த காலப்பகுதியில் ஞானபாஸ்கர உதய சங்கத்தின் தலைவியாகவும் மாதர் சங்க தலைவியாகவும் சமூக சேவையாற்றியுள்ளார் என்பதும் குறிப்ப-

சகோதரன்
சி. பத்மாசலன்

பிள்ளைகள்
வே.லோகநாதன் (கனடா)
வே. ஜெயரஞ்சன் (ஜேர்மனி)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவகௌரி யோகநாதன்



மலர்வு 17.06.1960

உதிர்வு 29.06.2021

நயினாதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நயினாதீவு 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகௌரி யோகநாதன் கடந்த (29.06.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், யோகநாதனின் அன்பு மனைவியும், திருச்செல்வம் (பிரான்ஸ்), உதயகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவகுமாரி மற்றும் சிவநேசகுமாரி (ஜேர்மன்), சிவரூபகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்சினி (லண்டன்), சிவஜெயந்தன், மயூதரன் (சுவிஸ்), தனுசியா (கனடா), தமயந்தி ஆகியோரின் அன்பு தாயும், லக்ஷனா, சஜிதா, சுரேஸ், சியானந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், சாரங்கி, அகல், சாருஷன், ருத்திரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.07.2021) வியாழக் கிழமை காலை யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொடர்பு: 077 8175733

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோண்டாவிலில் இரவு வன்முறை ஒருவரின் கை வெட்டித் துண்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம் கோண்டாவில் இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டா வில் சாலைக்கு பின்புறமாக உள்ள பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற வன்மு றையில் குறைந்தது 4 பேர் படுகாயம டைந்துள்ளனர். அவர்களில் ஒருவரது கை துண்டா டப்பட்டுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில், வீடொன்றில் தீ விபத்து ஏற்பட்டது என்றும் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்த னர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் இந்த அட்டூழியத்தில் ஈடுபட்டது.

சம்பவத்தில் வாகனங்கள் உட்பட பெறு மதியான பொருள்கள் சேதப்படுத்தப்பட் டுள்ளன. கைதுண்டாடப்பட்டவர் உட்பட காயமடைந்த ஏனைய நபர்கள் மருத்து வமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்த னர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் ஆறுகால் மடம் பகுதியிலும் இதேபோன்றதொரு வன்முறை இடம்பெற்றுள்ளது என்ற முறையிடப்பட்டது. அங்கு விசாரணை யில் ஈடுபட்டுள்ளோம் என பொலிஸார் தெரிவித்தனர். (து-26)

# இரசாயனங்களால்தான் கடல்வாழ் உயிரிகள் சாவு

## நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் தீ பரவியதன் பின்னர் ஏற்பட்ட சூழல் பாதிப்புகளாலேயே கடல்வாழ் உயிரினங்கள் உயிரிழந்துள்ளன என்று சட்டமா அதிபர் கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித் துள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் கடந்த மே மாதம் 20 ஆம் திகதி தீ பரவிய கப்பல் தொடர்பான விசாரணையின் முன்னேற்ற அறிக்கை நீதிமன் றுக்கு நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. அதன்போதே பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மாதவ தென்னகோன் இந்த விடயங்களை முன்வைத்தார்.

176 கடலாமைகளும் 20 டொல்பின்களும் 4 திமிங்கிலங்களும் இவ் வாறு உயிரிழந்துள்ளன. சிலர் கூறுவதைப்போல் அவை பருவநிலை மாற்றத்தால் உயிரிழக்கவில்லை.

39 நிபுணர்களைக் கொண்ட விசேட குழுவால் இந்த விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கால்நடை வைத்தியர்களால் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோத னைக்கு அமைய, இரசாயனக் கசிவே கடல்வாழ் உயிரினங்களின் இறப்புக்கு காரணம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கப்பலுக்கு சொந்தமான நிறுவனத்தின் உள்ளூர் பிரதிநிதி, நிறுவனத் தின் மூன்று அதிகாரிகளுக்கு கப்பலிலிருந்து அனுப்பப்பட்ட மின்னஞ் சல் தகவலை அழித்துள்ளார் என்பது விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

கப்பலின் கப்டன் உள்ளிட்ட 25 ஊழியர்களிடமும் இருந்த கையடக்கத் தொலைபேசியில் பதிவுசெய்யப்பட்ட நிழற்படங்கள் மற்றும் ஏனைய தரவுகளின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் முன்னெ டுக்கப் படுகின்றன. இதனூடாக ஏதேனும் குற்றச்செயல்கள் இடம்பெற்றமை உறுதிசெய்யப்பட்டால், ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தீ பரவ ஆரம்பித்தது தொடக்கம் அது குறித்து கப்பலின் கப்டன் உண் மையான விடயங்களை இலங்கை அதிகாரிகளுக்கு தொடர்ந்து மறைத்துள்ளமையும் இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மன்றில் கூறினார். விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பில் எதிர்வரும் 13 ஆம் திகதி மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார். (து-இ)

# வெறும் ஒரு ஓட்டத்தால் தெ.ஆபிரிக்கா வெற்றி!

## தொடரில் முன்னிலை

ஜமைக்கா, ஜூலை 1

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது ரி20 ஆட்டத்தில் ஓர் ஓட் டத்தால் வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிக்கின்றது தென்னாபிரிக்க அணி. தென்னாபிரிக்கா அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஐந்து ஆட்டங்கள் கொண்ட ரி20 தொடரில் விளையாடி வருகின்றது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 8 இலக்குகளை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. குயின்டன் டி ஹொக் அதிகபட்சமாக 72 ஓட்டங்களைப் பெற்றார். வான் டெர் டர்சன் 32 ஓட்டங்களையும், எய்டன் மார்க்ரம் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மக்கொய் 4 இலக் குகளையும், டுவைன் பிராவோ 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 பந்துப்பரிமாற் றங்களில் 166 ஓட்டங்களை மட்டுமே பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந் தது. லூயிஸ் 27 ஓட்டங்களையும், பூரன் 26 ஓட்டங்களையும், ரசல் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சம்சி 2 இலக்குகளைக் கைப்பற் றினார். 4 பந்துப்பரிமாற்றங்களை வீசி வெறும் 13 ஓட்டங்களையே அவர் விட்டுக்கொடுத்தார். இதனால் அவர் ஆட்டநாயகனாகவும் தெரிவானார். (ம)



# விம்பிள்டனில் செரீனா அவுட்

வொஷிங்டன், ஜூலை 1

விம்பிள்டன் தொடரின் முதல் சுற் றில் இருந்து காயம் காரணமாக வெளியேறினார் அமெரிக்க வீராங் கனையான செரீனா வில்லியம்ஸ்.

கொரோனாப் பெருந்தொற்றுக் கார ணமாக கடந்த வருடம் கைவிடப்பட்ட விம்பிள்டன் தொடர் மிகுந்த எதிர் பார்ப்புக்கு மத்தியில் இந்த வருடம் நடைபெறுகின்றது. இதனால் பல முன்னணி வீரர், வீராங்கனைகள் அங்கு முகாமிட்டுள்ளனர்.

இந்த நிலையில் அமெரிக்க வீராங் கனையும் 7 தடவைகள் விம்பிள்டன் கிண்ணத்தைக் கைப்பற்றியவரு மான செரீனா வில்லியம்ஸ் காயம் காரணமாக தொடரில் இருந்து வில கியுள்ளார். (ம)





# பதிலடி கொடுக்குமா இலங்கை அணி?

லண்டன், ஜூலை 1

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் இன்று இலங்கை அணி பதிலடி கொடுக்குமா என்பது தொடர்பில் எதிர் பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த இரு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. முதலா வது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற் றது. இதனால் இன்று நடைபெறும் ஆட்டத் திலும் இங்கிலாந்து வெற்றிபெற்றால் தொடர் அந்த அணியிடம் சென்றுவிடும். எனவே இன்று இலங்கை அணி பதிலடி கொடுக்குமா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற் பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ஐவகை நிலங்கள்

| | |
|---|---|
| குறிஞ்சி | - மலையும் மலை சார்ந்த இடமும் |
| முல்லை | - காடும் காடு சார்ந்த இடமும் |
| மருதம் | - வயலும் வயல் சார்ந்த இடமும் |
| நெய்தல் | - கடலும் கடல் சார்ந்த இடமும் |
| பாலை | - மணலும் மணல் சார்ந்த இடமும் |

## அங்கவீனமுடையோர் பயன்படுத்துவது

நடக்க முடியாதவர்- ஊன்றுகோல்
வாய் பேசாதவர்- சைகைமொழி
கண் தெரியாதலர் - வெள்ளைப் பிரம்பு

# சீனப் பெருஞ்சுவரின் வரலாறு



உலகப் பேரதிசயங்களில் அதிசயம், சீனப் பெருஞ்சுவர். நிலவில் இருந்து பார்த்தால், மண்ணில் தெரியும், மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரே விஷயம் சீனப்பெருஞ்சுவர் என்று கூறப்படுகிறது.

சீனப் பெருஞ்சுவர் மிக நீளமானது மட்டுமல்ல, மிகவும் பழமையானதும் கூட. அதாவது, இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே கட்டப்பட்டது இச்சுவர். ஆனால் இந்தச் சுவர் பயத்தின் காரணமாகவே எழுந்தது.

2500 ஆண்டுகளுக்கு முன்பு இன்றைய சீன நாட்டுக்கு பரம எதிரிகளாக விளங்கியவர்கள் மங்கோலியர்கள். சீனாவுக்கு வடக்கே இருந்த அண்டை நாடுதான் மங்கோலியா. சக்தி வாய்ந்த குதிரைப்படை வைத்திருந்த மங்கோலியர்கள் அடிக்கடி சீனாவுக்குள் நுழைந்து கையில் கிடைத்ததை எல்லாம் அள்ளிச் சென்றனர். அன்றைய சீனா இன்று போல் மிகப்பெரிய, பரந்து விரிந்து பேரரசாகத் திகழவில்லை, ஏராளமான குட்டி மன்னர்கள்தான் ஆட்சி செய்தார்கள். மங்கோலியர்களின் படையெடுப்பை விரும்பாத அவர்கள், தங்களது நாட்டுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சீனாவின் வடக்கு எல்லையில் சுவர்களை எழுப்பத் தொடங்கினார்கள்.

ஒவ்வொரு அரசரும் தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டும் சுவர்களை எழுப்பினார்கள். எனவே, தொடர்ச்சியாக இல்லாமல் துண்டு துண்டுப் பகுதிகளாகவே இந்தப் பெருஞ்சுவர் ஆரம்ப காலத்தில் இருந்தது. இறுக்கப்பட்ட மண் மற்றும் சரளைக்கற்களால் ஆரம்பத்தில் கட்டப்பட்ட இந்த பெருஞ்சுவர் அவ்வளவு வலிமை வாய்ந்ததாக இல்லை. வால், ஈட்டி போன்ற ஆயுதங்களின் தாக்குதல்களை மட்டும் தாக்குப்பிடிக்கக் கூடியதாகவே அந்தச் சுவர்கள் இருந்தன.

கி.மு. 221ம் ஆண்டில் சீனாவில் இருந்த சின் என்ற குறுநிலப் பகுதியை ஜெங் என்ற மன்னன் ஆட்சி செய்து வந்தான். பலசாலியாக வலம் வந்த ஜெங், சின்னச் சின்ன நாடுகளாக சிதறிக் கிடந்த சீனாவின் பல பகுதிகளை ஒன்றிணைத்து அனைத்துப் பகுதிகளுக்கும் தனது நாட்டின் பெயரான சின் என்பதையே சூட்டினான். இவ்வாறு ஒன்றிணைக்கப்பட்ட புதிய அரசு சின் என்று ஆரம்பத்தில் அழைக்கப்பட்டாலும் நாளடைவில் அந்த பெயர் சீனா என்று அழைக்கப்பட்டது.

அதேநேரம் புதிய அரசை நிறுவிய மன்னன் ஜெங் கையில் அனைத்து அதிகாரங்களும் குவிந்ததால் அவன் தன்னை சீனாவின் முதன் சக்கரவர்த்தியாக அறிவித்தான். அன்று முதல் அவன் சின் ஷி ஹிவாங் என்று அழைக்கப்பட்டான். இவனது ஆட்சிக் காலத்திலும் முக்கிய எதிரிகளான மங்கோலியர்கள் சீனாவின் மீது படையெடுத்தனர். இது மன்னன் சின் ஷி ஹிவாங்குக்குப் பெரும் தலைவலியாக இருந்தது.

இதையடுத்து தனது புதிய பேரரசுக்கு உட்பட்ட நாடுகளுக்கு இடையில் இருந்த எல்லைச் சுவர்களை இடிக்க உத்தரவிட்டான். அதே நேரம் தனது ஆட்சிப் பகுதிக்கு உட்பட்ட சீனாவின் வடக்கு எல்லையில் தொடர்ச்சியான மிகப்பெரிய பெருஞ்சுவரை எழுப்பினான். இன்றைய சீனப்பெருஞ்சுவரின் பிரம்மாண்டம் இப்படித்தான் ஆரம்பமானது.

கி.பி. 221ம் ஆண்டில் 5 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் வரை சுவரைக் கட்டி முடித்தனர். இதற்கு வான் லிகுவாங்கெங் என்று பெயரிட்டனர். கி.பி. 1368 முதல் 1644 வரை ஆட்சி செய்த மிங் வம்ச மன்னர் களின் காலத்தில் 6,400 கிலோ மீட்டர் வரை இந்தப் பெருஞ்சுவர் நீளம் கண்டது. இதன் நீளத்தை வைத்தே, எத்தனை பேர் எவ்வளவு கடின உழைப்பைக் கொட்டி இந்தப் பெருஞ்சுவரை உருவாக்கியிருப்பார்கள் என்று ஊகிக்க முடியும். பல நூற்றாண்டுகள் தாண்டி சீனப்பெருஞ்சுவர் கம்பீரமாக நின்றிருப்பதே இதன் வலிமைக்குச் சான்று!



# கிணற்றை தான் விற்றேன்

ஒருவன் தனது கிணற்றை ஒரு விவசாயிக்கு விற்றான்.

வாங்கிய விவசாயி அடுத்த நாள் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க ஆவலுடன் கிணற்றுக்கு வந்தான்.

அப்போது விற்றவன் அங்கே நின்று கொண்டிருந்தான். விவசாயியை தண்ணீர் எடுக்க விடாமல் தடுத்தான்.


விவசாயிக்குக் கோபம் வந்தது. "எனக்குக் கிணற்றை விற்று விட்டு அதிலிருந்து தண்ணீர் எடுக்க விடாமல் செய்கிறாயே?" என்று விற்றவனை கோபத்துடன் கேட்டான்.

விற்றவன் "ஐயா! உமக்கு நான் கிணற்றை மட்டும்தான் விற்றேன். அதிலிருக்கும் தண்ணீரை அல்லவே!!" என்று தர்க்கம் செய்தான்.

விவசாயி குழப்பத்துடனும் கோபத்துடனும் காஜியிடம் (நீதிபதியிடம்) சென்று முறையிட்டான்.

நீதிபதி இருவரையும் அழைத்து இருவர் பக்கத்து நியாயத்தையும் விசாரித்தார். பின்னர் கிணற்றை விற்றவனிடம் "நீ கிணற்றை விற்றுவிட்டபடியால் அது உன்னுடையதல்ல. அதில் உனது தண்ணீரை இன்னமும் வைத்திருப்பது தவறு. உனக்கு அதில்தான் தண்ணீரை சேமித்து வைக்க வேண்டுமென்றால் விவசாயிக்கு அதற்கான வாடகையை தினமும் கொடுத்து விடு. இல்லையென்றால் கிணற்றிலிருந்து உனது தண்ணீரை எடுத்துக்கொண்டு உடனே வெளியேறு" என்று தீர்ப்புக் கூறினார். விற்றவன் தலையைக் குனிந்துகொண்டே, தனது தவறுக்கு மன்னிப்புக் கோரி விட்டு, விவசாயியை கிணற்றின் முழுப் பலனையும் அனுபவிக்கச் சொல்லிவிட்டு, அங்கிருந்து சென்றுவிட்டான்.

## வர்ணம் தீட்டுவோம்





# சூரியன்

வட்ட வட்ட சூரியன்
தக தக வென மின்னுதே
பல கோடி தூரம் அது இருந்தும்
மின்னும் ஒளி இங்கு வர
எட்டு நொடிகள் ஆகுதாம்
எத்தனை வேகம் பார்த்தாயா?

தினம் தினம் தோன்றுமே
கால நேரம் தவறாமல்
கடமைகளை ஆற்றுமே
உலகம் அதன் கையிலே

இதை நன்கு உணர்ந்த சூரியன்
கடமை தவறுவது இல்லையே
நாமும் என்றும் அது போல
நடக்க உறுதி கொள்வோம் !



## பொது அறிவு

- மனித உடல் 60 சதவீதம் நீரால் ஆனது.
- பூச்சி இனங்களில் அறிவு மிக்கது எறும்பு
- உலகில் அதிக அளவில் கப்பல் போக்குவரத்து நடைபெறும் இடம், பனாமா கால்வாய்.
- விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் பிறந்த நாடு, ஜெர்மனி.
- திரவத்தங்கம் என்றழைக்கப்படுவது `பெட்ரோலியம்'.
- தபால்தலையை (ஸ்டாம்ப்) வட்ட வடிவமாக வெளியிட்ட நாடு மலேசியா.
- உடலில் ரத்தம் பாயாத பகுதி கருவிழி.
- உலகின் மிகப்பெரிய பூங்கா கனடாவில் உள்ள `உட் பபெல்லோ நேஷனல் பார்க்'.
- உலகின் மிகப்பெரிய உயிரியல் பூங்கா அமெரிக்காவில் உள்ள `டொராண்டோ உயிரியல் பூங்கா'.
- 1972ம் ஆண்டு வங்காள தேசத்தின் தேசிய விளையாட்டாக கபடி அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச கூட்டுக்குள்...

அரசுக்குள் எடுக்கப்படுகின்ற அவசர தீர்மானங்களால் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை மற்றும் கருத்து முரண்பாடுகள் காரணமாக தாம் கடும் அதிருப்தியில் உள்ளோம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தன்னிச்சையான செயற்பாடுகள் மற்றும் அண்மைக்கால நிலைப்பாடுகள் காரணமாக முக்கிய அமைச்சர்கள் சிலர் ஓரங்கட்டப்படுகின்றனர்.

ஆளும் கட்சிக்குள் பங்காளிக் கட்சிகளை இலக்குவைத்துத் தாக்கும் செயற்பாடுகள் நிறுத்தப்படவில்லை.

அமைச்சர் விமல் வீரவன்சவின் அமைச்சின் கீழ் இயங்கிய எப்பாவெல பொஸ்பேர்ட் நிறுவனத்தை மாற்றியமை மற்றும் அமைச்சர் உதய கம்மன்பிலவை பதவி விலக வலியுறுத்தியமை போன்ற விடயங்களில் அமைச்சர்கள் அதிருப்தியடைந்துள்ளனர். அமைச்சரவையில் இதனை வெளிப்படையாக தெரிவித்தும் சிலரது தனிப்பட்ட தீர்மானங்கள் காரணமாக ஒரு சில அமைச்சர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்." என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, "அரசுக்குள் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளமை வெளிப்படையாகத் தெரிகின்ற நிலையில், அண்மைக்காலமாக அரசின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் இடம்பெற்று வருகின்ற கருத்து முரண்பாடுகளுக்குத் தீர்வுகாண அரச பிரதானிகளின் தலைமையில் பேச்சுகளை முன்னெடுப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. தொடர்ச்சியாக பங்காளிக்கட்சிகள் ஓரங்கட்டப்பட்டு வருகின்றன." - என்று ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். (த-22)

## போராட்டத்தை....

மேற்கொண்டுவந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது என்று சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனையை, ஆயுள் தண்டனையாக அறிவிக்குமாறு வலியுறுத்தி அந்தக் கைதிகள் கடந்த 5 நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். சுமார் 200 க்கும் அதிகமான கைதிகள் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர். அவர்கள் கூரை மீது ஏறியும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தநிலையில், "கைதிகளின் இந்தக் கோரிக்கை தொடர்பில் 5 தடவைகள் கலந்துரையாடல்கள் நடைபெற்றிருந்தன. அது தொடர்பில் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் மற்றும் சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளரும் கைதிகளுக்கு முன்னர் தெளிவிப்படுத்தியிருந்தனர். எனினும் கைதிகள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். அதனால், சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் மற்றும் சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் மீண்டும் நேற்று கைதிகளுடன் கலந்துரையாடினர். அவர்களது கோரிக்கை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் கைதிகளுக்கு விளக்கியிருந்தனர். அதற்கமைய கைதிகள் தங்களது போராட்டத்தை கைவிடத் தீர்மானித்துள்ளனர்" என்று சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (த-இ)

## இன்றும்...

சங்கம் அறிவித்துள்ளது.

தமது கோரிக்கைகள் சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோரிடம் முன்னரும் தற்பொழுதும் தொடர்ச்சியான கலந்துரையாடல் நடத்தியும் தீர்க்க முடியாத காரணத்தால் இவ்வாறான போராட்டத்துக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்று தாதியர் சங்கம் தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

தனது கோரிக்கைகளாக,

1. வாரத்தில் 5 நாள்கள் வேலையை நடைமுறைப்படுத்தல், 2. பதவிநிலை சேவையாக மீண்டும் அறிவித்தல். 3. பதவி உயர்வை தரம் II க்கு 5 வருடம், தரம் 1க்கு 12 வருடங்களாக மாற்றுதல், 4. அனைத்து தாதியர்களுக்கும், இடர் கொடுப்பனவை வழங்குதல். 5. தாதியர் சேவைப் பிரமாணக் குறிப்பை விரைவாக திருத்தியமைத்து அங்கீகாரம் பெற்றுக்கொடுத்தல். 6. தாதிய கல்லூரியை பல்கலைக்கழகங்களின் கீழ் கொண்டுவந்து அனைவருக்கும் BSc nursing கற்கையைப் பெற்றுக்கொடுத்தல் என்பவற்றை முன்வைத்துள்ளது.

மேற்படி கோரிக்கைகளை கலந்துரையாடல் மூலம் தீர்க்க முயற்சித்தும் அதனை நடைமுறைப்படுத்த முடியாதமையால் இவ்வாறான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்தக் காலத்தில் அவசர சிகிச்சைப் பிரிவு, விபத்து அவசர சிகிச்சை போன்ற உயிர்காப்பு சிகிச்சையில் தாதிய உதியோகத்தர்கள் தன்னார்வ அடிப்படையில் ஈடுபடுவார்கள் என்பதை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-20)

## மாகாண...

ஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தினார்.

தேர்தல் முறைமை சீர்திருத்தம் தொடர்பில் சிறு கட்சிகளுக்கிடையிலான சந்திப்பொன்று ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அநுரகுமார தலைமையிலான ஜே.வி.பி. ஆகியவை இந்தச்சந்திப்பில் பங்கேற்றன. அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு வலியுறுத்தினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

தேர்தல் முறைமை மறுசீரமைப்பு தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்துரையாடுவதற்கு முன்னர் சிறு கட்சிகளுக்கிடையில் பொதுவானதொரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. தற்போதைய சூழ்நிலையில் அரசுமீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். எனவே தேர்தல் முறைமை மறுசீரமைப்பு என்ற போர்வையில் மாகாணசபைத் தேர்தலை பிற்போடுவதற்கான நகர்வு இடம்பெறுகின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

தேர்தல் முறைமை மறுசீரமைக்கப்படுவதற்கு முன்னர் மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவேண்டும். அதேபோல தேர்தல் மறுசீரமைப்பும் நீதியான முறையில் இடம்பெறவேண்டும்." என்றார். (த-44)

## நெல், அரிசிக்கு...

பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை கடுமையாக்கப்படும். இது விடயத்தில் தளர்வுப் போக்குக்கு இடமே இல்லை." என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே திட்டவட்டமாக அறிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அமைச்சர் இவ்வாறு அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

" எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தொடக்கம் அடுத்த ஆறு மாதங்களுக்கு நாட்டுக்குத் தேவையான அரிசி கையிருப்பில் உள்ளதால் அரிசித் தட்டுப்பாடு ஏற்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

விவசாயிகளிடமிருந்து இந்தமுறை நாட்டு அரிசி நெல் ஒரு கிலோ 50 ரூபாவுக்கும், சம்பா அரிசி நெல் 52 ரூபாவுக்கும், பச்சை நெல் 44 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படும். மேற்படி விலைகளே நிர்ணயிக்கப்பட்டன.

நெல் சந்தைப்படுத்தும் சபை ஊடாக நாளை (இன்று) முதல் நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கை ஆரம்பமாகும். ஏனைய காலப்பகுதிபோல் தாமதம் ஏற்படாது. விவசாயிகளுக்கு உடன் பணம் வழங்குவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

சம்பா மற்றும் கெகுலு அரிசி ஒரு கிலோவை 98 ரூபாவுக்கும், நாட்டரிசி ஒரு கிலோ 96 ரூபாவுக்கும் விற்பனை செய்யமுடியும் என வர்த்தகத்துறை அமைச்சர் விலை நிர்ணயித்துள்ளார். அதனால்தான் ஒரு கிலோ நெல்லுக்கு 50 ரூபாவை நிர்ணயித்துள்ளோம். வர்த்தமானி வெளியிடப்பட்டாலும் அது செயலுக்கு வருவதில்லை என்ற குற்றச்சாட்டு அரசுக்கு எதிராக உள்ளது. எனவே, இந்தமுறை சட்டம் கடுமையாக செயற்படுத்தப்படும். அதிக விலைக்கு இனி அரிசி விற்கமுடியாது. மீறி விற்பனை செய்தால் ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்படும்.

"சேதனப் பசளை மூலம் விவசாயம்" என்ற முடிவில் இருந்து அரசு மாறாது." என்றார். (த-44)

## மீள்குடியேற்ற...

ஒருங்கிணைப்புச் செயலாளர் காசிலிங்கம் கீதநாத், மேலதிக பொறுப்பு வழங்கப்பட்டு நேற்று நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவருக்குரிய உத்தியோக பூர்வ நியமனக் கடிதத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ச வழங்கினார். அவரை குறித்த பதவிக்கு நியமிப்பதற்கு அமைச்சரவை சில வாரங்களுக்கு முன்னரே அனுமதி வழங்கியிருந்தது. இந்தநிலையில், அவருக்கு நேற்று நியமனம் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காசிலிங்கம் கீதநாத், 2019ஆம் ஆண்டு நவம்பரில் பிரதமராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டதிலிருந்து பிரமரின் இணைப்புச் செயலாளராக உள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் வீடுகள் வழங்கலில் இடம்பெறுகின்றன என்று கூறப்படும் முறைகேடுகள், மோசடிகள் என்பன இனி இடம்பெறாதவாறு பொருத்தமான நபர்களுக்கு வீடுகள் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் அவர் செயலாற்றவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

## இலங்கை...

சபை. இலங்கை அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடிவருகின்றது. ரி20 தொடரை 0:3 என்று இலங்கை முழுமையாக இழந்தது.

இந்தத் தொடர் முடிவடைந்த மறுநாள் இரவு இலங்கை வீரர்களான டிக்வெல்ல, குசல் மென்டிஸ், குணதிலக ஆகியோர் வீரர்களுக்காக 'பயோ பபுள்' பாதுகாப்பு வளையத்தை விட்டு வெளியே வந்து 'சிகரெட்'டுடன் வீதியில் நடமாடுவது காணொலியாக நிரூபிக்கப்பட்டது. இதையடுத்து அவர்களை நாட்டுக்கு திருப்பி அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் மூவருக்கும் ஓர் ஆண்டுக்குத் தடையும் நேற்று விதிக்கப்பட்டது. (ம)

## யாழ்.மாணவனின்...

வனே குறித்த செயலியைக் கண்டுபிடித்துள்ளார்.

'mSquard' என்ற குறித்த செயலி தொலைத் தொடர்பாடல் துறையில் ஒரு முக்கியமான செயலியாக தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுவயதிலிருந்தே மென்பொருள் விஞ்ஞானியாக வரவேண்டும் என்று தனது கல்வியைத் தொடர்ந்த இந்த மாணவன் கடந்த ஒரு மாத காலமாக நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருந்த பயணத்தடையை சிறந்த முறையில் பயன்படுத்தி வீட்டிலிருந்து இந்த புதிய செயலியை கண்டுபிடித்துள்ளார். மிகத்துல்லியமான முறையில் ஒளிப்படங்கள் மற்றும் காணொலித் தரவுகளை இதனூடாக நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ள முடியும் என்பதுடன் இந்த செயலி மிகவும் அதிவிரைவுத் தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. 60 MB அளவு கொள்ளளவுடைய குறித்த மென்பொருளை இணைய உலாவிகள் மூலம், பிளேஸ்ரோர் மூலமும் தரவேற்றம் செய்துகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-20)

## யாழில்...

ரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்19 தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 93ஆக உயர்வடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த குருநகரைச் சேர்ந்த 60 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த 73 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை வீட்டில் உயிரிழந்துள்ளார். அவரது உயிரிழப்புத் தொடர்பில் கேள்வியுற்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நேற்றுக் காலை அங்கு சென்றுள்ளார்.

சந்தேகம்கொண்டு உயிரிழந்தவரின் சடலத்தை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததுடன் வீட்டிலிருந்தவர்களிடமும் மாதிரிகளைப் பெற்றிருந்தார். அதன் பரிசோதனை முடிவுகளில் உயிரிழந்தவர் மற்றும் அவரது குடும்பத்தில் மூவருக்குத் தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதனால் நேற்றுக்காலை இறுதிச் சடங்குக்குச் சென்றவர்கள் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு உயிரிழந்தவரின் சடலம் சுகாதார விதிகளுக்கு அமைய மின் தகனம் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-26,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜேர்மனியை வீழ்த்தி இங்கிலாந்து உள்ளே

**பேர்லின், ஜூலை 1**

**யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் ஜேர்மனியை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதிபெற்றது இங்கிலாந்து.**

ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் கடும் போராட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் கோல்கள் எதையும் பதிவுசெய்ய முடியவில்லை. இரண்டாவது பாதியின் 75ஆவது நிமிடத்தில் ஸ்ரேர்லிங் இங்கிலாந்தின் முதலாவது கோலைப் பதிவுசெய்து முன்னிலையை வழங்கினார். 85ஆவது நிமிடத்தில் ஹரி கேன் இங்கிலாந்தின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது. 'குரூப் ஆப் டெத்' என்று குறிப்பிட்ட குழுவில் இறுதியாக ஜேர்மனியே மீதமிருந்த நிலையில் அந்த அணியும் நேற்றமுன்தினத்துடன் வெளியேறியது. இந்தக் குழுவில் போர்த்துக்கல், பிரான்ஸ், ஜேர்மனி, ஹங்கேரி ஆகியன இடம்பிடித்திருந்தன. (ம)

# சுவீடனைத் தோற்கடித்து உக்ரைன் காலிறுதிக்குள்

ஸ்ரொக்கோம், ஜூலை 1

யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சுவீடனைத் தோற்கடித்து காலிறுதிக்குத் தகுதி பெற்றது உக்ரைன். ஆரம்பம் முதல் இரு அணிகளுக்கும் சமமான வாய்ப்புக்கள் கிடைப்பதும், அதை இரு அணிகளுமே வீணாக்குவது மாக ஆட்டம் நகர்ந்து கொண்டிருந்தது. 27ஆவது நிமிடத்தில் சின்செங்கோ உக்ரைனின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். சுவீடன் அணித்தலைவர் எமைல் போர்ஸ்பெர்க் 43ஆவது நிமிடத்தில் கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன.

இரண்டாவது பாதியில் எமைல் போர்ஸ்பெர்க் இரு தடவைகள் கோல் பெறுவதற்கு முயற்சித்த போதிலும் அது உக்ரைனின் கோல் கம்பங்களில் பட்டுத் தெறித்தது. கோல்கள் எவையும் பெறப்படாத நிலையில் மேலதிக நிமிடங்கள் வழங்கப்பட்டன.

மேலதிக நிமிடங்களில் இறுதிக் கட்டத்தில் உக்ரைன் வீரர் ஆர்டெம் கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் உக்ரைன் வெற்றிபெற்றது. (ம)





## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 5 இலட்சம் மட்டும். (யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரம்)

தொடர்பு:

077 62 34 204, 076 221 2037, 077 2880 152

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். யாழ் நகரிலிருந்து 1½ km தூரம் (பரப்பின் விலை 5 லட்சம் ரூபா)**

தொடர்பு: 077 4683 354. 076 734 1023, 077 064 2661

## சிவகுரு ஹாட்வெயாருக்கு பணிநிலை வேண்டுகை

1. கணக்காளர் கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும் (இருபாலாரும்)
2. விற்பனை பிரதிநிதிகள் மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.
   i. ஒயில்மாட் சிவகுரு (கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம்)
   ii. உந்துருளி பாட்ஸ் விற்பனை செய்யக்கூடியவர்கள்
   iii. சீமெந்து, சீற் விற்பனை செய்யக்கூடியவர்கள்
3. கணக்காய்வாளர் (இருபாலாரும்)
4. எழுதுனர் (வங்கி நடவடிக்கை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்)

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**தொடர்புக்கு :077 7722 305**

## மரண அறிவித்தல்



**தோற்றம் :14.10.1960 மறைவு :30.06.2021**

**பிலிப்றோசாறோ (றோசாறி) குருநகர்**

குருநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்றோசாறோ நேற்று (30.06.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராயப்பு பிலிப்-பிலிப் செபமாலை இராசாத்தி தம்பதியரின் அன்புப் புத்திரனும், காலஞ்சென்றவர்களான சலமோன் ஜோண் - ஜோண் ஆனாசி (செலினம்மா) தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி (செல்வி)யின் கணவரும், கனிஸ்ரன் (அவுஸ்திரேலியா), டிஸ்மன், றொசான், ஜேனுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், சித்து, ஜெறோனா அவர்களின் மாமனாரும், றிசி, டியானாவின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2021) வியாழக்கிழமை மதியம் 1.00 மணியளவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.8/2, கொண்டடி வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர். 077 088 0047 077 420 0155**



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.